காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 24 திங்கட்கிழமை 08.05.2023 கதிர் 179

## இது ரகசியம் அல்ல!

பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கான கதைஎன்றுகேள்விப்பட்டிருப்பீர்கள். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குத்தான் அது இப்போதைக்கு முழுப் பொருத்தம். அரசியல் ஆதாயத்தைத் தேடும் நோக்கத்தோடு தையிட்டியில் அவர்கள் நடத்திய போராட்டம் பூமராங் மாதிரி, இருந்ததையும் கெடுத்த நொள்ளக் கண்ணன் கதைக்குக் கொண்டு வந்து விட்டிருக்கின்றது.

தையிட்டியில் விகாரைக்குக் கலசம் வைக்கப்பட்டதான செய்தி ஊடகங்களில் பெரிதாக வந்ததை அடுத்து அந்தப் பகுதிக்குச் சென்ற முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் உள்ளிட்ட குழுவினர், இது தொடர்பில் தாம் ஒரு கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப் போகிறார்கள் என்றும் அதற்கு ஆதரவு தரும்படியும் ☞2

# தீர்வை ஒற்றையாட்சிக்குள் முடக்க ரணிலும், கூட்டமைப்பும் நாடகம்

## கஜேந்திரன் எம்.பி. காட்டம்



தமிழ் மக்களுக்கான தீர்வை ஒற்றையாட்சிக்குள் முடக்குவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் கூட்டிணைந்து நாடகமாடுகிறார்கள் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைவர்களில் ஒருவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார்.

வடக்கு மக்களின் அதிகாரப் பகிர்வு, அபிவிருத்தி தொடர்பில் பேச்சு நடத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ள நிலையில், ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப்., தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் ஆகியவற்றின் கூட்டான ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி இந்தக் கூட்டத்துக்குக் கிழக்கு மாகாண பிரதிநிதிகளையும் அழைக்குமாறு நிபந்தனை விடுத்துள்ளது. அதேநேரம், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஜனாதிபதியைச் சந்திப்பதற்குத் தீர்மானித்துள்ளது. ☞2

# கிழக்குப் பிரதிநிதிகளையும் ஜனாதிபதி அழைக்கவேண்டும்

## அங்கஜனும் ஒரே நிலைப்பாடு



ஜனாதிபதியுடனான பேச்சுக்கு கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அழைப்பதே பொருத்தமானது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மக்களின் அதிகாரப்பகிர்வு, அபிவிருத்தி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் எதிர்வரும் 11,12,13 ஆம் திகதிகளில் பேச்சு நடத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளமை தொடர்பில் தமது கட்சியின் நிலைப்பாட்டை தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதியினால் நல்லிணக்கம், அதிகாரப் பகிர்வு, அபிவிருத்தி சம்பந்தமாகப் பேசுவதற்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. வடக்கு மக்களைப் பிரதிநித்துவம் செய்பவன் என்ற அடிப்படையில் அதில் நான் பங்கேற்பதற்குத் தீர்மானித்துள்ளேன்.

அதேநேரம், வடக்கு மக்களின் பிரச்சினைகள் என்று தனியாக இந்த விடயங்களை பார்க்க முடியாது. தமிழ் மக்களின் விடயங்கள் கிழக்கு மக்களையும் உள்ளடக்கியதாகும். ஆகவே கிழக்கு மக்களின் பிரதிநிதிகளையும் ☞2

# வேட்பாளர்களான அரச பணியாளர்கள் இன்று முதல் பணிக்குத் திரும்பலாம்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்பு மனுக்களை தாக்கல்செய்துள்ள அரச ஊழியர்கள் தாம் போட்டியிடும் பிரதேசத்திற்கு வெளியில் கடமை புரிவார்களாயின் இன்று முதல் கடமைக்குச் செல்ல முடியும் என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான இராஜாங்க அமைச்சர் சாணக்க வக்கும்புர அறிவித்துள்ளார்.

குறித்த விடயம் சம்பந்தமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ள அரச ஊழியர்கள் இன்று முதல் கடமைக்குத் திரும்ப முடியும்.

அவர்களை அரச சேவையில் இணைத்துக் கொள்வதற்கான ☞2

# அமைச்சர் பந்துலவுடன் முரண்பட்ட பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர்

இரத்தினபுரியில் புதிய பேருந்துகளை கையளிக்கும் நிகழ்வில் அமைச்சர் பந்துல குணவர்த்தனவுக்கும், பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்லால் ஜயசேகரவுக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டது.

இரத்தினபுரி டிப்போவுக்கு இலங்கை போக்குவரத்து சபையினால் 110 இலட்சம் ரூபா பெறுமதியுள்ள 23 பேருந்துகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இதனை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் லிலித் டி சில்வா முதலில் உரையாற்றினார்.

அவர் உரையாற்றும்போது, இதுவே மத்திய ஆட்சி ☞2

## யாழ். மாவட்டத்தில்

# எரிபொருள் பங்கீட்டு அட்டைகளை அச்சிட்டு ரூபா 15 லட்சம் வீணடிப்பு

## காலதாமதமான பொருத்தமற்ற நடவடிக்கையால் இழப்பு

(ந.லோகதயாளன்)

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு மக் கள் வரிசைகளில் நின்ற காலங்களில், எரிபொருள்பங்கீட்டை ஒழுங்குபடுத்துவதற்காக யாழ். மாவட்டச் செயலகம் மேற்கொண்ட பொருத்தமற்ற நடவடிக்கை காரணமாக 15 லட்சம் ரூபா பணம் வீணடிக்கப்பட்டுள்ளது.

அதியுச்ச பொருளாதார நெருக்கடி காரணமாக 2022ஆம் ☞2

# மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் முக்கிய இயந்திரம் செயலிழந்து போனது

## நோயாளர்கள் பாதிப்பு

மஹரகம புற்றுநோய் சிகிச்சை வைத்தியசாலையில் புற்றுநோயர்களை அடையாளம் காணுதல் மற்றும் தீவிர சிகிச்சையை உறுதி செய்தலுக்கான 'பெட்' பரிசோதனை இயந்திரம் பாதிக்கப்பட்டுள்ளமையால் நோயாளிகள் பாதிப்படைந்துள்ளனர்.

இலங்கையில் பெட் (PET - positron emission tomography) பரிசோதனை செய்வதற்கான இயந்திரம் 2018ஆம் ஆண்டு மஹரகம வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டது.

இந்த இயந்திரம், புற்றுநோயாளர்களை அடையாளம் காணுதல், உடலில் உள்ள புற்றுநோய்க்கு இலக்கான பகுதிகளை அடையாளப்படுத்தல், சிகிச்சைகளுக்கான துல்லியமான நடவடிக்கைகளை உறுதி செய்தல் ☞2

# சமூகப் பாதுகாப்புக் கொடுப்பனவை வங்கிகளூடாகச் செலுத்த முயற்சி

சமூகப் பாதுகாப்பு கொடுப்பனவுகளை அரச வங்கிகள் ஊடாக வழங்குவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுவருவதாக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிபாளர் நாயகம் பந்துல திலகசிறி தெரிவித்துள்ளார்.

அவர் இதுதொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

சமூகப் பாதுகாப்புப் கொடுப்பனவுகளான, சமுர்த்திக் கொடுப்பனவு, நீரிழிவு நோயாளர் கொடுப்பனவு, முதியவர்களுக்கான கொடுப்பனவு, கைம்பெண்களுக்கான கொடுப்பனவு உள்ளிட்டவற்றை அரச வங்கிகள் ஊடாக வழங்குவது தொடர்பில் பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது.

அரச வங்கிகில் காணப்படுகின்ற புதிய தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி குறித்தகொடுப்பனவைவழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வரையில் குறித்த கொடுப்பனவுகள் அனைத்தும் தற்போதைய முறைமையிலேயே வழங்கப்படவுள்ளன.

அத்துடன், சமுர்த்தி வங்கியையும் புதிய தொழில்நுட்பங்களுடன் கூடியதாக வினைத்திறனாக செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றார்.

# மொட்டுவை இனி யாராலும் கட்டியெழுப்பவே முடியாது!

## அடித்துக் கூறுகின்றார் சந்திம வீரக்கொடி



மொட்டுக் கட்சி என்பது ஒருகட்சியல்ல. அதுகுடும்பம். குடும்பமாகச் சேர்ந்து கொள்ளையடிப்பதற்காக உருவாக்கப்பட்ட கட்சி. இனி அதை யாராலும் கட்டியெழுப்ப முடியாது.

-இவ்வாறு கூறியுள்ளார் மொட்டுக் கட்சியில் இருந்து பிரிந்து சென்ற ☞2

# ஆணைக்குழுக்களின் உறுப்பினர்கள் நியமனத்தை தாமதப்படுத்தாதீர்கள்

## சபாநாயகர் மஹிந்த யாப்பா வலியுறுத்து

கொழும்பு, மே 08

சுயாதீனஆணைக்குழுக்களுக்கான உறுப்புரிமைகளை விரைந்து நியமிக்குமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தேர்தல்கள் ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, இலஞ்ச ஊழல்ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்கு உள்ளிட்டவற்றுக்கான உறுப்பினர்கள் விரைந்து நியமிக்கப்பட வேண் டும் என்பதை வலியுறுத்துகின்றேன்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடைபெறும் வரையில் தேர்தல்கள் ஆணைக் குழுவிற்கு புதிய உறுப்பினர்களை நியமிப்ப தற்கு பரிந்துரைக்கப் பட்டிருந்தாலும் அந்தத் தீர்மானத்தைத் தொடர்ந்தும் நீடிப்பது பொருத்தமற்றதாகும்.

ஆகவே இது தொடர்பில் விரைந்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அனைத்து அரசியல் தரப்பினரிடத்திலும் வலியுறுத்துகின்றேன் - என்றார்.

# அரசமைப்பு பேரவை நாளை கூடுகிறது

அரசமைப்புப் பேரவை நாளை செவ்வாய்க்கிழமை கூடவுள்ளதாகதெரிவிக்கப்படுகின்றது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் பேரவை கூடவுள்ளதோடு, முக்கிய சில தீர்மானங்களை எடுக்கப் படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக, சிறு, மற்றும் சிறுபான்மைக் கட்சிகளின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனின் பெயர் பேரவைக்கு முன்மொழியப் பட்டுள்ளபோதும், அதற்கு பொது ஜன பெரமுனவின் சுயாதீன அணியிர் எதிர்ப்பு வெளியிட்டு வருகின்ற நிலையில் அது பற்றியும் நாளை முக்கிய முடிவு எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் அப்பதவிக்காக தமது தரப்பிலிருந்து பிவித் துரு ஹெல உறுமயவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பிலவை பொதுஜன பெரமுனவினர் முன்மொழிந்துள்ளனர். அவருடைய முன்மொழிவை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், ☞2

# இருக்கின்ற அரசே உடையும் நிலை; தேசிய அரசு எப்படி சாத்தியப்படும்?

## சஜித் அணி கேள்விக்கணை



இருக்கின்ற அரசே கவிழும் நிலையில் உள்ள போது எப்படி தேசிய அரசு சாத்தியப்படும்? - என்று கேள்வி எழுப்புகின்றார் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார எம்.பி.

தேசிய அரசு உருவாக்கப்பட்டால் அதில் ஐக்கிய மக்கள் சக்தி இணையுமா என்று அவரிடம் கேட்ட போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசு ஏனைய கட்சிகளில் உள்ள எம்.பிக்களுக்கு வலை வீசி வருகின்றது. அரசுக்குப் பெரும்பான்மை ஆதரவு இருந்தால் - மொட்டுக் கட்சியின் முழுமையான ஆதரவு இருந்தால் எதற்காக அடுத்த கட்சிகளின் எம்.பிக்களுக்கு வலைவீசவேண்டும்?

மக்கள் கஷ்டத்தில் இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் கோடிக்கணக்கான பணம் கொடுத்து எம்.பிக்களை ☞2

# சர்வதேச தாளத்துக்கு ஆடாததால்தான் மஹிந்தவும் கோட்டாவும் விரட்டியடிப்பு!

## மொட்டு எம்.பி. கூறுகின்றார்



மேற்கு நாடுகளுக்குத் தேவையான வகையில் செயற்படாததால்தான் மஹிந்த, கோட்டாபய ஆகியோர் பதவிகளில் இருந்து விரட்டப்பட்டனர் - என்று மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டி. வீரசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

பல சந்தர்ப்பங்களில் இந்த நாடு சர்வதேச அழுத்தத்துக்கு உள்ளாகி இருக்கின்றது. போர்க் காலத்திலும் அப்படித்தான். போரை நிறுத்துமாறு பல நாடுகள் அழுத்தம் கொடுத்தன. அதை முறியடித்ததால்தான் போரை வெற்றிகொள்ள முடிந்தது.

பொருளாதாரப் ☞2

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அந்த மக்களிடம் கேட்டனர். அதன்தொடர்ச்சியாகப்போராட்டமும் அறிவிக்கப்பட்டது.

புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்குப் போராட்டம் என்றுஅறிவிக்கப்பட்டிருந்தது. ஊர்ச் சனங்கள், குறிப்பாக விகாரையால் தமது காணிகளை இழந்திருக்கக் கூடிய மக்கள் சிலரும் கட்சி ஆதரவாளர்கள் சிலரும் போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர். கட்சியின்பெரியதலைகள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனும் சட்டத்தரணி காண்டீபனும் அங்கிருந்தனர். பகல்பொழுது போராட்டம்பிரச்சினைகள்எதுவுமின்றிப் போனாலும் இரவிலும்போராட்டம்தொடர்ந்ததை அடுத்துப் பிரச்சினைகள் கிளம்பின.

போராட்டத்திற்குஆதரவாகவும் வேடிக்கை பார்க்கவும் திரண்டிருந்த எல்லோரையும் பொலிஸார் அடித்து விரட்டிவிட்டு தடுப்பரண்களைப் போடத் தொடங்கிவிட்டார்கள். போராட்டம் நடந்த இடத்தில் கிட்டத்தட்ட கஜேந்திரனையும் காண்டீபனையும் தனிமைப் படுத்திக்கொண்டு மற்றைய எல்லோரையும் விரட்டிவிட்டனர் பொலிஸார். அச்சமான ஒருசூழல். போராட்ட இடத்தில் நிற்க ஊடகவியலாளர்களுக்கும் அனுமதி இல்லை என்று கூறி அவர்ளையும் தடுப்புகளுக்கு வெளியே விரட்டிவிட்டது பொலிஸ். உள்ளே சென்று வரவோ, படமெடுக்கவோ, செய்திசேரிக்கவோ அனுமதிக்க முடியாது என்று இறுக்கமாக நின்றுகொண்டது பொலிஸ். இது அச்ச நிலையை மேலும் அதிகரித்தது.

இதனால், உள்ளே தனிமைப்படுத்தப்பட்டிருப்பவர்களுக்கு ஏதாவது நடந்துவிடுமோஎன்கிறஅச்சம்முன்னணியினருக்கே ஏற்பட்டது. அதனால் ஊடகவியலாளர்களை அங்கிருந்து அகல வேண்டாம் என்று அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். ஏதாவது அசம்பாவிதம் நிகழ்ந்தாலும் என்று அச்சப்பட்ட அவர்கள் ஊடகவியலாளர்கள் அங்கேயிருப்பது பாதுகாப்பானது என்று கருதினார்கள். அதனால்அவர்களை அங்கே இரவு முழுவதும் நிற்கும்படி கேட்டுக்கொண்டார்கள்.

அந்தஇடத்தில்குறைந்தளவிலானஊடகவியலாளர்களே இருந்தனர். அவர்களும் பிற்பகல் முதல் தொடர்ச்சியாகக் களத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தனர். சோர்வுற்று வீடுகளுக்குச் செல்லும் மனோநிலையில் இருந்தவர்களை கட்சியினரின் இந்தக் கோரிக்கை அங்கேயே தங்க வைத்தது. போராட்டத்தில் கலந்துகொண்டிருந்த காணி உரிமையாளர்களே உணவு தேநீர் என்பவறைத் தயாரித்துக்கொடுத்து ஊடகவியலாளர்கள் அங்கு தங்கி நிற்பதற்கான வசதிகளைப் பார்த்துக்கொண்டார்கள். அவர்களும் இரவிரவாக, குறைந்தது அதிகாலை 3, 4 மணிவரையும் அங்கேயே விழித்துக்கிடந்தார்கள். ஊடகங்களுக்குத் தகவல்களை வழங்கிக் கொண்டிருந்தார்கள். அவை உடனுக்குடன் இணையத் தளங்களிலும் பின்னர் பத்திரிகைகளிலும் வெளியாகின. அசம்பாவிதங்கள் எவையும் நிகழவில்லை.

மறுநாள் விடிந்தபோது இந்தச் செய்திகளால் ஏற்பட்ட சூழலில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இருந்து தமிழ் நாடாளுமன்றஉறுப்பினர்கள் பலர் வெளிநடப்புச் செய்து போராட்டக் களத்திற்கும் நேரில் சென்றனர். அவர்கள் அனைவரும் மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள். சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்அங்கஜனும்அதில் ஒருவர். இவர்களின் வருகை அவர்களுக்கான அரசியல் ஆதாயமாகிவிடும் என்று கருதியதாலோ என்னவோ முன்னணியினரிடம்இருந்து காழ்ப்புணர்வுவெளிப்பாடுகள் அங்கு அதிகமாக இருந்தன. கூடியிருந்த அந்தக் கட்சி ஆதரவாளர்களிடமும் அதே போக்குத்தான் காணப்பட்டது. மாற்றுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் எள்ளி நகையாடி வசவுகளைப் பொழிந்தனர்.

இதுஅங்குநின்றஊடவியலாளர்களுக்கு ஆச்சரியத்தையும் விசனத்தையும் ஏற்படுத்தியது. நடந்த மற்றொரு சம்பவமும் அவர்களைக் கோபப்படுத்தியது. போராட்டக் களத்திற்கு வந்திருந்தநாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் பிஸ்கட்டுக்கள் மற்றும் சோடாக்கள் வாங்கி வந்திருந்தார். அவற்றைப் போராட்டக் காரர்களுக்குக் கொடுத்தார். அதனைப் பெற்றுக் கொண்டவர்கள் அவர் அந்தப் பக்கம் மறைந்ததும் தூக்கி வீசிவிட்டார்கள். அரச தரப்போடு ஒட்டி உறவாடி, அவர்களுடன் சேர்ந்தியங்கும் ஒருவரிடமிருந்து உணவை, குடிபானங்களைப் பெறுவதா என்கிறகோபத்தின் வெளிப்பாடாக அதை நிகழ்த்தினார்கள்.

மக்கள் உணவுக்கு வழியின்றி அல்லல்பட்டுவரும் இந்தக் காலத்தில் இவ்வாறு உணவுப்பொருள்கள்வீணாக்கப்பட்டது அங்கிருந்த ஊடகவியலாளர்களைக் கோபம் கொள்ளவைத்தது. வேண்டாம் என்றால் கொடுக்கும்போதே மறுத்திருக்கலாம். அல்லது வேண்டாம்என்றால்யாராவது ஏழைகளுக்காவது கொடுத்திருக்கலாம், எதற்குவீசியெறிந்து வீணடிக்கவேண்டடும் என்ற அறச் சீற்றம் அவர்களிடம் தொற்றிக்கொண்டது.

மாற்றுஅரசியல்தரப்பினிடம் அரசியல் நாகரிகம் இன்றி நடந்துகொண்டது மற்றும் உணவை வீணடித்து ஆகிய இரண்டும் ஊடகவியலாளர்களின் உணர்வுகளைத் தொட்டுவிட அவை பற்றி அவர்கள் தமது எண்ணவோட்டத்தை சமூக ஊடகங்களில் பகிர்ந்தனர். அது வைரல் ஆகியது. பலரும் அந்த அரசியல் நாகரீகமற்ற செயலுக்கு எதிராக சமூக ஊடங்களில் பொங்கினார்கள். அதுட்ரெண்ட் ஆகியது. மறுநாள் அனேகமான ஊடகங்களும் அதுபற்றியசெய்திகளுக்குமுக்கியத்தும் கொடுத்திருந்தன.

இதுமுன்னணியினருக்கு ஆத்திரத்தைக் கிளப்ப, மூன்றாம் நாளில் ஊடகவியலாளர்களுக்கு மூஞ்சையைத் திருப்பத் தொடங்கினார்கள். போராட்டம் பற்றி அங்கிருந்த ஊடகவியலாளர்களுக்குகருத்துச்சொல்லமாட்டோம் என்று புறமுதுகு காட்டினார்கள். தங்கள் ஆதரவாளர்களைக் கொண்டு அலைபேசிகளில் காணொலிகளைப்பதிவுசெய்து அவற்றைச்சமூகஊடகங்களில் பகிர்ந்துகொள்ச்செய்தார்கள். தங்கள் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் விதத்தில் ஊடகவியலாளர்கள் நடந்து கொண்டதால் மனக் கசப்பு ஏற்பட்டதாகப் பின்னர் கட்சியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி சுகாஸ் பின்னர் தெரிவித்தார்.

முதல்நாளில்தங்கள்பாதுகாப்புக்காவும்செய்திக்காகவும் களத்தில் இருக்கவேண்டும் என்று கேட்கப்பட்ட ஊடகவியலாளர்கள் மூன்றாம் நாளில் வேண்டாப் பெண்டாட்டி ஆகிவிட்டார்கள். "உங்களிடம் பேச விரும்பவில்லை" என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் ஊடகவியலாளர்களிடம் நேரடியாகவே தெரிவித்து முகத்தைத் திருப்பிக் கொண்டு சென்றார்.

ஊடகவியலாளர்களிடமும் ஒரு பழக்கம் இருக்கிறது. உயிரையும் துச்சமென மதித்து அர்ப்பணிப்போடு எந்த நெருக்கடியான களத்திலும் பணியாற்றுவார்கள். ஆனால், தமக்கு சுயமரியாதைக் குறைவு ஏற்பட்டது என்று கருதினார்களானால் வைத்துச் சாதித்துவிடுவார்கள். தாம் மக்களுக்காகப் பணியாற்றுபவர்கள், விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பாற்பட்டு நின்று மக்களுக்கு உண்மையை அறிக்கையிடவேண்டியவர்கள் என்பதெல்லாம் அவர்களிடம் இருந்தாலும். அவர்களின் தன்முனைப்பு (ஈகோ) சீண்டப்படும்போது பதிலடிகொடுப்பதில் தீவிரமாக இருப்பார்கள்.

விளைவு, முன்னணியினருக்கு 2021ஆம்ஆண்டேஇந்த விகாரை தொடர்பில் கடிதம் கொடுக்கப்பட்டபோதும் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் சும்மாஇருந்தவர்கள்இப்போது விகாரை கட்டி முடிக்கப் பட்ட பின்னர் வந்து "சீன்" போடுகிறார்கள் என்னும் வகையிலான தகவல்கள் சமூக ஊடகங்களில் விரைவாகப் பரவத் தொடங்கியது. அதற்கு ஆதாரமாக ஒரு கடிதமும் சுற்றிவரத் தொடங்கியது. அந்தக் கடிதம் போலியானது என்று முன்னணி அறிக்கைவிட்டது, ஆனால் கடிதம் கொடுக்கப்பட்டது உண்மைதான் என்பதை நிரூபிக்க ஊடகவியலாளர்கள் அதிக சிரத்தை எடுத்துக் கொண்டார்ககள். கடிதத்தில் கையெழுத்துவைத்தவர்களில் ஒருவரிடம் நேரில் வாக்கு மூலம் வாங்கி அதனையும் சமூக ஊடகங்ளில் வெளியிட்டார்கள்.

போதாதற்கு, போராட்டத்தின்போது அதில்கலந்துகொள்ள வந்த ஒருவரை படைப் புலனாய்வாளர் என்று தெரிவித்து அவமானப்படுத்திஅங்கிருந்து அனுப்பி வைத்திருந்தனர் முன்னணியினர். அவரையும் பிடித்து அவர் புலனாய்வாளர் இல்லைஎன்பதையும்அவரை அங்கிருந்த முன்னணியினர் பலருக்கு முன்கூட்டியே தெரியும் என்பதையும் நிரூபிக்கப் பார்த்தார்கள். இவை எல்லாமும் சமூக ஊடகங்களில் சர்ச்சைகளாக ஓடித் திரிகின்றன. இவற்றை வெளியிட்ட ஒருசில முப்புத்தக கணக்குகளின் பதிவுகளை முடக்குவது உள்ளிட்ட பதில் நடவடிக்கைகளும்எடுக்கப்பட இந்த ஊடகப் போராட்டம் தொடர்கின்றது.

தையிட்டிப் போராட்டம் முடிந்த பின்னர் நிலமையைச்சமாளிக்கும் வகையில் முன்னணி ஊடகப்பேச்சாளர் சுகாஸ் ஒரு ஒலிப் பதிவை வெளியிட்டார் என்றாலும் சமாதானமாகாத ஊடகவியலாளர்கள் தமிழ்த் தேசியப் பேரவை என்ற அமைப்பு (இதுவும் முன்னணியின் மற்றொரு அமைப்புத்தான் என்று சொல்லப்படுகின்றது) நேற்று கந்தரோடையில் நடத்திய போராட்டத்தையும் அடியோடு புறக்கணித்துவிட்டார்கள். அது தொடர்பில் செய்தி சேகரிக்க யாரும் செல்லவில்லை. கடைசியில் முகப் புத்தங்களில் படங்களைப் பகிர்ந்த தன் மூலம் தகவலைப் பரப்ப முன்னணியினர் முயன்று கொண்டிருந்தார்கள்.

தங்களைப்பற்றிநல்லதாகவும் தமக்கு ஆதரவாகவும் எழுதினால்தான் ஊடகவியலாளர்களை நல்லவர் வல்லவர் நாலும் தெரிந்தவர் என்று தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுவதும் விமர்சிப்பவர்கள் தொடர்பில் அவதூறு பேசுவதும் அவர்களை ஒதுக்கிவைத்து நடப்பதும் அரசியல்வாதிகளிடம் காணப்படும் பழக்கம்தான். என்றாலும் விமர்சனங்களை எதிர்கொள்ள முடியாமல் வெளிப்படையாக இப்படி முதலுக்கே மோசம் செய்து கொண்டது முன்னிணியினர் மட்டும்தான் என்று நினைக்கிறேன்.

அதேநேரம் ஊடகவிலாளர்கள் கட்சிகளுக்காகவோ அரசியல்வாதிகளுக்காகவோ பணியாற்றுபவர்கள் அல்லர், அவர்கள் மக்களுக்காகப் பணியாற்றுபவர்கள், மக்கள் உண்மைகளைத் தெரிந்து கொள்வதற்கான வழியை, வாய்ப்பைக் கொடுப்பவர்கள். எனவே நடந்ததைப் புறக் கணித்து மக்களிடம் இருந்தசெய்தியைமறைக்கும் உரிமை அவர்களுக்குக் கிடையாது. என்னகோபதாபம் என்றாலும் செய்தியை மக்களுக்குச்சொல்லிவிட்டு, விமர்சனங்களை முன்வைப்பதே சரியானது.

**- இடிமின்னல் -**

## தீர்வை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஜனாதிபதியின் பேச்சுக்கான அழைப்புத் தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் போதே கஜேந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதியின் அழைப்புத் தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியாகிய நாம் தெளிவான நிலைப்பாட்டில் உள்ளோம். ஒற்றையாட்சி கைவிடப்பட்டு சமஷ்டி அடிப்படையில் பேச்சை முன்னெடுப்பதாக இருந்தால் மட்டுமே நாம் அதில் பங்கேற்போம்.

தமிழ் அரசுக் கட்சி இந்தப் பேச்சில் பங்கேற்பதாக அறிவித்துள்ளது. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பாகத் தம்மை அடையாளப் படுத்தியுள்ள தரப்பிலிருந்து செல்வம் அடைக்கலாநதன் கிழக்கு பிரதிநிதிகளையும் அழைக்கவேண்டும் இல்லாதுவிட்டால் பேச்சில் கலந்து கொள்ளப்போவதில்லைஎன்று அறிவித்துள்ளார்.

இவை எல்லாமே அரசியல் நாடகங்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழ் அரசுக் கட்சியும் கூட்டிணைந்து அரங்கேற்றும் நாடகங்கள்.

இவர்கள் முதலில் நிபந்தனை விதிப்பதும், பின்னர் ஜனாதிபதிகிழக்குப்பிரதிநிதிகளை அழைப்பதும் முற்கூட்டியே திட்டமிடப்பட்டதொன்றாகும். அதுமட்டுமன்றி அவர்கள் அனைவரும் ஒற்றையாட்சிக்குள்ளேயேஅதிகாரப்பகிர்வு தொடர்பில் பேசுவதற்குச் செல்கின்றார்கள் என்பது முக்கிய விடயமாகின்றது - என்றார்.

## கிழக்குப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அழைக்க வேண்டும் என்பது தான் எனது நிலைப்பாடாக உள்ளது.

அந்த விடயத்தினை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மறுபரிசீலனைக்கு உட்படுத்தி அவர்களையும் அழைப்பார் என்று எதிர்பார்கின்றேன் - என்றார்.

## வேட்பாளர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அமைச்சரவை அனுமதி பெறப்பட்ட நிலையில் அதற்கான சுற்றறிக்கை அனுமதிக்காகத் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் நடைபெற்ற கலந்துரையாடல்களுக்கு அமைவாக எவ்வித மானமுரண்பாடுகளும்காணப்படாமையால்குறித்தஅனுமதி நாளையதினம் (இன்று) கிடைத்துவிடும். ஆகவே, வேட்பு மனுத் தாக்கல்செய்துள்ள ஊழியர்கள் தாம் போட்டியிடும் பிரதேசத்திற்கு வெளியில் கடமை புரிவார்களாக இருந்தால் நாளை (இன்று) முதல் கடமையில் இணைந்து கொள்ள முடியும் - என்றார்.

போட்டியிடும் தொகுதியிலேயே கடமைபுரியும் அரச பணியாளர்களைஇடமாற்றம் செய்த பின்னர் பணிக்குத் திரும்ப அனுமதிப்பது என்று அமைச்சரவை ஏற்கனவே முடிவெடுத்துள்ளது. அது தொடர்பான சுற்றறிக்கை இன்று வெளயாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## அமைச்சர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வழங்கிய பணத்தில் பேருந்துகளை கொள்வனவுசெய்யும் கடைசிச் சந்தர்ப்பமாகும். இனிமேல் இவ்வாறான கொள்வனவுக்காக அரச பணம் ஒதுக்கீடு செய்யப்படுமா என்பது தெரியவில்லை. ஆகவே பேருந்துகளை கவனமாகப் பயன்படுத்த வேண்டும் என்றார்.

இதனையடுத்து புதிய பேருந்துகள் உத்தி யோக பூர்வமாகக் கையளிக்கப் பட்டன. நிகழ்வில் பிரதம அதிதியாக அமைச்சர் பந்துல குணவர்த்தன கலந்து கொண்டார். அத்துடன் அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி, நாடாளுமன்ற உறுப்பினர்களான வாசுதேவ நாணயக்கார, பிரேம்லால் ஜயசேகர உள்ளிட்டவர்களும் பங்கேற்றனர். அதனைத் தொடர்ந்து பேருந்துகளின் வெள்ளோட்டப் பயணமொன்றும் இடம்பெற்றது.

அப்பயணம் நிறைவடைந்தபோது, பேருந்துகளைப் பகிர்ந்தளிப்பது தொடர்பில் பிரச்சினைகள் உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்லால்ஜயசேகர அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

அப்போது, குறித்த விடயம் சம்பந்தமாக தாம் ஏற்கனவே கூறிவிட்டதாக அமைச்சர் பதிலளித்தார். இருப்பினும், கடினமான பகுதிகளுக்கு பேருந்துகள் வழங்கப்படவில்லை என்று கடுமையான தொனியில் நாடடாளுமன்ற உறுப்பினர் பிரேம்லால் தெரிவித்தார்.

இதனையடுத்து அமைச்சர் பந்துலவுக்கும், பிரேம்லால் எம்.பிக்கும் இடையில் தர்க்கம் ஏற்பட்டது. பின்னர் அங்கிருந்த சகபாடிகளால் நிலைமை சுமூகத்திற்கு கொண்டுவரப்பட்டது.

## எரிபொருள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஆண்டு நாடு முழுவதும் மக்கள் அத்தியாவசியப பொருட்களைப்பெற நீண்ட வரிசைகள் நின்றிருந்தனர். எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு அரசிடம் டொலர் இல்லாத காரணத்தால் அதற்கும் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டது. அனைத்துப் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்பாகவும் நீண்ட வரிசைகளில் நின்றிருந்தனர். இரவுபகலாக வரிசைகள் நீண்டிருந்தன.

வரிசைகளில் நின்றிருந்த போதும் எரிபொருளைப்பெற்று கள்ளச் சந்தையில் கூடுதல் விலைக்குவிற்கும்சட்டவிரோதிகளால் அப்பாவி மக்களுக்கு எரிபொருள் சரிவரக் கிடைக்காத நிலைமை இருந்தது. இதனைத் தடுப்பதற்கான நடவடிக்கையை கியூ ஆர் முறை மூலம் தீர்ப்பதற்கான நடவடிக்கையை கொழும்பு ஆட்சி மேற்கொண்டது. அது தாமதமடைந்து வந்த நிலையில் யாழ். மாவட்டச் செயலகம்மக்களுக்குபங்கீட்டு அட்டையை வழங்கி அதன் மூலம் இந்த எரிபொருள் விநியோகத்தை ஒழுங்குபடுத்த நடவடிக்கை எடுத்தது.

போர்க் காலத்தில் இது போன்ற பங்கீட்டு அட்டைகள் மூலம் மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களைத் தடையின்றி நேர்த்தியாக விநியோகம்செய்தஅனுபவம் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திற்கு இருந்தது. எனவே அதனடிப்படையில் எரிபொருள் பங்கீட்டையும் மேற்கொள்வதற்குநடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும் பொருத்தமான காலப் பகுதியில் அதிகாரிகள் இந்த நடவடிக்கையை எடுக்கத் தவறியதன் காரணமாக 15 லட்சம் ரூபா வீணடிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள 15 பிரதேச செயலாளர் பிரிவுகளிம் வாழும் மக்களுக்கும் பங்கீட்டு அட்டையை விநியோகித்து அதன் மூலம் எரிபொருள் விநியோகத்தைச் சீர்செய்யமுடியும்என்பதுதான் யாழ். மாவட்டச் செயலகத்தின் திட்டம்.

இதற்காக எரிபொருள் பங்கீட்டு அட்டைகள் அச்சிடப்பட்டன. அவ்வாறுஅச்சிடப்பட்ட பங்கீட்டு அட்டைக்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினால் நிதி அனுசரணை வழங்கப்பட்டது.

யாழ். மாவட்டச்செயலகம் எரிபொருள் பங்கீட்டு அட்டைகளை 2022 ஜுலை 15 அச்சிட்டுப் பெற்றுக்கொண்டது. அதனையடுத்து குறித்த எரிபொருள் பங்கீட்டு அட்டைகளைமாவட்டத்தின்15பிரதேச செயலாளர் பிரிவுகளின் ஊடாகவும் கிராம சேவகர்கள் மூலம் பொதுமக்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதற்காக மாவட்ட செயலகம் 2 இலட்சத்து 943 பங்கீட்டு அட்டைகள் அச்சிடுள்ளது. அதற்காக 15 இலட்சத்து 46 ஆயிரத்து 531 ரூபா 20 சதத்தை செலவிட்டுள்ளது என்றுமாவட்டச்செயலகத்தின் பிரதம கணக்காளர் என்.எஸ். ஆர்.சிவரூபன் தெரிவித்தார். இந்தத் தொகை யாழ். நகரில் உள்ள எவர்கிறீன் பதிப்பகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

அச்சிடப்பட்ட பங்கீட்டு அட்டைகளில் சொற்ப அளவானவையே மக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. எஞ்சியவை யாழ். மாவட்டச் செயலகத்திலேயே வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பங்கீட்டு அட்டை முறை முழுமையாக நடைமுறைக்கு வருவதற்கு முன்பாகவே கொழும்பு ஆட்சியாளர்களால் கியூ ஆர் முறைமை அறிமுகப் படுத்தப்பட்டு விட்டதால் இதற்குத் தேவையின்றிப் போய்விட்டது என்று மாவட்டச்செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்ட உடனேயே இவ்வாறான பங்கீட்டு அட்டைகளை பயன்பாட்டுக்குக் கொண்டு வரலாம் என்று தெரிவிக்கப் பட்ட யோசனைகளை நடைமுறைப்படுத்ததாது கால தாமதப்படுத்தியமை காரணமாகவே இந்த அட்டை முறையைச் சிறிது காலத் திற்குக்கூட நடைமுறைப் படுத்த முடியாமல் போய்விட்டதுடன் நெருக்கடியான காலத்தில் 15 லட்சம் ரூபா வீணடிக்கப்பட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

## மஹரகம .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) உள்ளிட்ட செயற்பாடுகளுக்காகபயன்படுத்தப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் குறித்த பரிசோதனைக்காக பயன்படுத்தப்படும்கதிர்இயக்க ஐசடோப்புக்கள் இன்மையால் அங்கு சிகிச்சைக்குச் செல்பவர்கள் மிகக் கடுமையான நெருக்கடிகளுக்கு உள்ளாகின்றனர்.

இதேவேளை, கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் பெட் பரிசோதனைக் கான இயந்திரம் காணப்படுகின்றபோதும் அங்கும் கதிர் இயக்க ஐசடோப்புக்கள் இன்மையால் செயலற்றுப் போயுள்ளது.

இந்த கதிர் இயக்க ஐசடோப்புக்கள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. அத்துடன் இவற்றின் மூலமே, எம். ஆர்.ஐ. பரிசோதனை ஊடாக கண்டறிய முடியாத விடயங்களை துல்லியமாக அவதானிக்க முடிகிறது..

இதுதொடர்பில் மஹரகம வைத்தியசாலை நிருவாகம் கூறுகையில், கடந்த புதன்கிழமை முதல் இந்த இயந்திரம் செயலற்றுப்போயுள்ளதால் ஐந்து பரிசோதனைகள் பிற்போடப் பட்டுள்ளன, எதிர்வரும் வாரத்தின் இறுதியில் குறித்த இயந்திரத்தினை இயக்குவதற்கான நிலைமைகள் ஏற்படலாம் என்றது.

## மொட்டுவை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி.

அவர் மேலும் கூறுகையில்,

மொட்டுக் கட்சிக்கு இனி யார் தலைவராக வந்தாலும் அந்தக் கட்சியை இனிக் கட்டி எழுப்ப முடியாது. அது கட்சியல்ல; ஒரு குடும்பம். ராஜபக்ஷவின் குடும்பம்.

அந்தக் குடும்பத்தின் இருப்புக்காக அடுத்த அரசியல் வாதிகளை அழித்து - பொருளாதாரத்தை நாசமாக்கி - மக்களின் எதிர்பார்ப்புக்களை முடிவுக்குக் கொண்டு வந்து குடும்பமாகச் சேர்ந்து கொள்ளையடிப்பதற்காக உருவாக்கப்பட்ட கட்சி இது.

யாருக்குத் தலைவர் பதவி கொடுத்தாலும், யாருக்கு அமைச்சுப் பதவிகள் கொடுத்தாலும்இந்தக்கட்சியை இனிக் கட்டியெழுப்ப முடியாது என்பதை ஜனாதிபதி உள்ளிட்ட மொட்டுக் கட்சியினர் புரிந்துகொள்ள வேண்டும். - என்றார். (02)

## சர்வதேச ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பிரச்சினை தலைதூக்கிய போது மக்கள் வீதிக்கு இறங்கிப் போராடினர். இந்த மக்களின்போராட்டத்தைப்பயன்படுத்தி ஆட்சி மாற்றத்தை ஏற் படுத்துவதற்குச் சிலர் நடவடிக்கைஎடுத்தனர். ஆனால், அவர்களால் அந்த இலக்கைப் பூரணப்படுத்தமுடியவில்லை.

மேற்கு நாடுகளுக்குத் தேவையான வகையில் செயற்படாததால் மஹிந்த, கோட்டாபய ஆகியோர் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டனர் என்று நாங்கள் நம்புகின்றோம்.

இது தொடர்பில் விமல் வீரவன்சகூறியவிடயங்களில் நாம் உடன்படுகின்றோம். அவர் கூறிய மேலும் சில விடயங்கள் பற்றி எமக்கு எதுவும் தெரியாது.

மஹிந்த, கோட்டாபய ஆகியோர் பதவியில் இருந்து விலகியதும், எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட பலரை அழைத்துப் பதவியை ஏற்குமாறு கூறினோம். அவர்கள் வரவில்லை. இறுதியில் ரணிலே பாரமேற்றார்.

இன்று அரசியல் ஸ்தீரத் தன்மை ஏற்பட்டுள்ளது. அதனால்தான் சர்வதேச நாணய நிதியத்தின் நிதி எமக்குக் கிடைத்தது.

பழைய நிலைமை இப்போது இல்லை. ஆர்ப்பாட்டங்கள் இல்லை. பெற்றோல் வரிசை இல்லை. மின்வெட்டு இல்லை. ஜனாதிபதிசெய்கின்றநல்லவேலைத் திட்டங்களுக்கும்நாம்ஆதரவு வழங்குவோம். ஆனால், பிழையானதிட்டங்களைஏற்க மாட்டோம். - என்றார். (02)

## அரசமைப்பு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அவர்கள் ஏற்கனவே ஆளும் தரப்பான பொது ஜன பெரமுனவை பிரதிநிதித்துப்படுத்தியே நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்றும் எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டுகின்றன.

ஆகவே இந்த விவகாரத்திற்கு நாளை முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், ஆணைக் குழுக்களுக்கான உறுப்பினர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள நிலையில் பொருத்தமான நியமனங்களை முடிவுறுத்துவதற்கும்நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விளம்பரத் தொடர்புக்கு - தொலைபேசி இலக்கம் 076 443 8622



காலைக்கதிர்
Kalaikkathir

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அனைவருமே எதிர்க்கவேண்டும்

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தை நாட்டிலுள்ள அனைத்து இன மக்களும் எதிர்த்தே ஆகவேண்டும் என தமிழ் அரசுக் கட்சியின் கொழும்புக் கிளை உபதலைவர் மிதிலைச் செல்வி சிறீ பத்மநாதன் வேண்டுகோள் விடுத்தார்.

சனிக்கிழமையாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற உழைக்கும் மகளிர் அமைப்பின் மகளிர் தின நிகழ்வில் தலைமை உரையை ஆற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரித்ததாவது:

தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத சட்டம் அப்பாவி தமிழ் இளைஞர்களை அடக்கி ஒடுக்குவதற்காக கொண்டுவந்த ஆபத்தான சட்டம்.

அதைவிட தற்போது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் அதைவிட பாரதூர மான விடயங்களை உள்ளடக்கியதான சட்ட மூலமாக அறிகிறோம்.

குறித்த சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ள நிலையில் அதற்கு எதிரான போராட்டங்களும் எதிர்ப்பு கருத்துக்களும் வலுப்பெற்றுக் காணப்படுகிறது.

தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத சட்டம் தமிழ் மக்களையே அதிகம் பாதித்துள்ள நிலையில் தற்போது தென்னிலங்கை மக்களும் அதன் பாதிப்புகளை உணரத் தொடங்கியுள்ளனர்.

தென் இலங்கை பெரும்பான்மை இன மக்கள் பயங்கரவாத சட்டம் வேண்டாம் புதிய பயங்கர வாத எதிர்ப்புச் சட்டமூலம் வேண்டாம் என போராடிவரும் நிலையில் சிறுபான்மை இனத்தவர்களின் பங்களிப்பும் அவசியம்.

ஏனெனில் 30 வருடங்களுக்கு மேலாக பயங்கரவாத சட்டத்தினால் பாதிக்கப்பட்ட சிறுபான்மை மக்கள் குறித்த சட்டம் இருந்து என்ன இல்லாவிட்டால் என்ன என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு உள்ளனர்.

ஆகவே பயங்கரவாத சட்டத்தின் ஆபத்துக்களை தென்னிலங்கை பெரும்பான்மை சமூகம் உணரத் தொடங்கியுள்ள நிலையில் ஒற்றுமையுடன் ஓரணியில் சகல இன மக்களும் ஒன்று சேர்ந்து எதிர்க்க முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், தமிழரசு கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, தமிழரசு கட்சியினுடைய முன்னாள் மகளிர் அணி தலைவி விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரின் மனைவி சசிகலா இரவிராஜ் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## திடீர் தீ விபத்து

கொழும்பு மட்டக்குளி - மோதர பாலத்திற்கு அருகில் உள்ள இப்பகேவத்தை தொடர் வீட்டுத் தொகுதியில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தீயை அணைக்க கொழும்பு மாநகரசபையின் 5 தீயணைப்பு வாகனங்கள் அனுப்பி வைக்கப்பட்டுப் பணிகள் முன்னெடுக்கப் பட்டன.

தீ பரவலுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## வெடுக்குநாறி ஆலயத்தில் நாளை சங்காபிஷேகம்

வவுனியா, ஒலுமடு வெடுக்குநாறி மலையில் அமைந்துள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நாளை செவ்வாய்கிழமை அதிகாலை 3 மணிமுதல் சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் அனைவரையும் திரண்டு வந்து பங்கேற்மாறு யாழ் மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் வ.பார்த்தீபன் தெரிவித்தார்.

எமது இனத்திற்கே உரித்தான பூர்வீக நிலங்களில் இடம் பெறும் எமது பண்பாட்டு பாரம்பரிய நிகழ்வுகளின் போதான எங்கள் பங்கேற்பின் குறைவும் அந்த இடங்கள் திட்டமிட்டு அபகரிக்கப்படுவதற்குக் காரணமாகின்றன. தமிழர் மரபுசார் அடையாளங்கள் அழிக்கப்பட்டு அதன் வரலாறுகளை மாற்றியமைப்பதற்கும் வாய்பாக அமைக்கின்றது.

வெடுக்குநாரி மலை ஆதிலிங்கேஸ்வர கோவிலின் சங்காபிஷேகம் 10.05.2023 செவ்வாய்கிழமை அதிகாலை 3 மணிமுதல் நடைபெறவுள்ளது. அந்த நிகழ்வுகளில் தமிழராய் ஒன்றுபட்டு பங்கேற்று எமது நிலத்தினையும் எமது அடையாளங்களையும் பேணிப் பாதுகாத்து ஆதித் தமிழன் என்றுரைப்போம் என குறிப்பிட்டுள்ளார்.

## கிளிநொச்சியில் 7 ஆயிரம் குடும்பங்கள் உணவு வாய்ப்பின்றிக் கடும் பாதுப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் 7 ஆயிரத்து 313 குடும்பங்கள் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டு, உணவின்மை பிரச்சினைகளை எதிர்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான குடும்பங்கள் வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவையாக காணப்படுகின்றன.

இந்நிலையில் இந்த மாவட்டத்தில் 7,313 குடும்பங்கள் உணவு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகின்றன.

குறிப்பாக, கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 4,050 குடும்பங்களும், கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் 1,546 குடும்பங்களும், பூனகரி பிரதேச செயலாளர் பிரிவில் 390 குடும்பங்களும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் 1,327 குடும்பங்களும் உணவு நெருக்கடி நிலையால் பாதிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், கரைச்சியில் 5 வயதுக்குட்பட்ட 54 சிறுவர்களும், 5 முதல் 16 வயது வரையான 1,234 சிறுவர்களும், கண்டாவளை யில் 5 வயதுக்குட்பட்ட 180 சிறுவர்களும், 5 முதல் 16 வயது வரையான 704 சிறுவர்களும், பூனகரியில் 5 வயதுக்குட்பட்ட 261 சிறுவர்களும், 5 முதல் 16 வயது வரையான 507 சிறுவர்களும், பச்சிலைப்பள்ளியில் 5 வயதுக்குட்பட்ட 73 சிறுவர்களும், 5 முதல் 16 வயது வரையான 320 சிறுவர்களும் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், மேற்படி நான்கு பிரதேசசெயலாளர் பிரிவுகளிலும் 318 வரையான கர்ப்பிணித் தாய்மார்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வணிக வளாகத்தில் துப்பாக்கிச் சூடு குழந்தை உட்பட 9 பேர் உயிரிழப்பு

### அமெரிக்காவின் டெக்சாஸில் சம்பவம்

அமெரிக்காவின் டெக்சாஸ் நகரில் ஒரு வணிக வளாகத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒரு குழந்தை உள்பட 9 பேர் கொல்லப்பட்டனர். 7 பேர் காயமடைந்தனர். துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட மர்ம நபரும் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்தச்சம்பவம் குறித்து டெக்சாஸ் பொலிஸ் தலைவர் ப்ரயன் ஹார்வி செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

டெக்சாஸ் நகரில் ஆலன் பகுதியில் ஆலன் ப்ரீமியம் அவுட்லெட்ஸ் என்ற வணிக வளா கம் உள்ளது. இங்கு திடீரென மர்ம நபர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்டார். இதில் ஒரு குழந்தை உள்பட 9 பேர் உயிரிழந்தனர். காயங்களுடன் 7 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். துப்பாக்கிச் சூடு நடத்திய மர்ம நபரும் கொல்லப்பட்டார் என்றார்.

காயமடைந்தவர்களில் 5 முதல் 61 வயதிலான நபர்கள் உள்ளனர் என்று மருத்துவமனைவட்டாரம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக டெக்சாஸ் ஆளுநர் கிரெக் அபாட் கூறுகையில், வார்த்தைகளால் விவரிக்க முடியாத துயரம் நடந்துள்ளது. உள்ளூர் பொலிஸாருக்கு எல்லா உதவிகளையும் செய்யத் தயாராக உள்ளோம் என்றார்.

2023 ஆம் அண்டு தொடங்கியதிலிருந்து இதுவரை அமெரிக்காவில் 198 பேர் பல்வேறு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் காரணமாக இறந்துள்ளனர். கன் வயலன்ஸ் ஆர்கைவ் என்ற தன்னார்வ தொண்டு நிறுவனம் இந்தத் தகவல்களை திரட்டி தொகுத்து வருகிறது. இந்த அமைப்பின் தரவுகளின்படி 2016ஆம் ஆண்டில்தான் ஒரே ஆண்டில் அதிபட்ச துப்பாக்கிச் சூடு உயிரிழப்புகள் நடந்துள்ளன.

## தாயின் கருவிலேயே அறுவைச் சிகிச்சை

### அமெரிக்க மருத்துவர்கள் சாதனை



அமெரிக்காவில் தாயின் கருவில் இருந்த சிசுவுக்கு மூளையில் அறுவைசிகிச்சை செய்து மருத்துவர்கள் சாதனை புரிந்துள்ளனர்.

மருத்துவ உலகில் நாளும் பல சாதனைகளை மருத்துவர்கள் புரிந்து வருகின்றனர். அந்த வகையில் மற்றுமொரு சாதனை அமெரிக்காவில் நடந்தேறியுள்ளது. அமெரிக்காவை சேர்ந்த பெண் ஒருவர் பாஸ்டனில் உள்ள மருத்துவமனையில் தனது 34ஆவது வார கர்ப்ப கால பரிசோதனைக்காக சென்றிருக்கிறார். அப்போது வயிற்றில் இருக்கும் அவரது குழந்தைக்கு மூளையிலிருந்து இதயத்திற்கு குருதியை எடுத்துச்செல்லும் நாளங்கள் வளர்ச்சி அடையாமல் இருந்ததை மருத்துவர்கள் கண்டறிந்தனர்.

மூளையில் ஏற்படும் இந்தவகையிலான பாதிப்பை மருத்துவர்கள் நரம்புச்சிதைவு (Vein of Galen malformation) என்று குறிப்பிடுகின்றனர். இந்தப் பாதிப்பு குறித்து மருத்துவர் ஆர்பாக் கூறும்போது, இந்த நிலையில் உள்ள அனைத்து குழந்தைகளும் 50% முதல் 60% உடனடியாக மிகவும் நோய்வாய்ப்படும். மேலும், அவர்களுக்கு 40 சதவிகித இறப்பு நிகழ்வதற்கு வாய்ப்புண்டு. உயிர் பிழைக்கும் குழந்தைகளில் பாதி பேர் கடுமையான நரம்பியல் மற்றும் அறிவாற்றல் பிரச்சினைகளை அனுபவிக்கிறார்கள் என்று தெரிவித்தார்.

இந்த நிலையில் அக்குழந்தைக்கு தாயின் வயிற்றிலே அறுவைசிகிச்சை செய்ய பாஸ்டனில் உள்ள டேரன் ஆர்பாக் தலைமையிலான மருத்துவர்கள் குழு முடிவு செய்தது. இதனைத்தொடர்ந்து வெற்றிக்கரமாக சிசுவுக்கு மருத்துவர்கள் அறுவைச் செய்து முடித்துள்ளனர். அறுவைசிகிச்சைக்கு முடிந்து இரண்டு நாட்களுக்குப் பிறகு அக்குழந்தை பிறந்தது. டென்வர் என்று பெயரிடப்பட்டுள்ள அக்குழந்தை தற்போது நலமாக உள்ளது.

## பண மோசடி குற்றச்சாட்டில் கொலன்னாவை பெண் கைது

ருமேனியாவில் தொழில் வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி கொழும்பு பகுதியில் இளைஞர்களிடம் பணத்தைப் பெற்று மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொலன்னாவை பிரதேசத்தை சேர்ந்த குறித்த பெண், பத்தரமுல்ல பிரதேசத்தில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்தபோதே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பில் உள்ள 5 இளைஞர்களிடம் சந்தேகநபரான பெண் 25 இலட்சம் ரூபா மோசடி செய்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.

பண மோசடியில் சிக்கிய இளைஞர்கள் பணியகத்தின் சிறப்பு புலனாய்வுப் பிரிவுக்கு வழங்கிய முறைப்பாடுகளின் அடிப்படையில் குறித்த பெண் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## டெங்கை கட்டுப்படுத்த ஜனாதிபதி செயலணி

நாடளாவிய ரீதியில் பரவி வரும் டெங்கு நோயை கட்டுப்படுத்த சுகாதார அமைச்சு துரித நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. இதற்காக ஜனாதிபதி செயலணி ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 31,098 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இந்நிலையில் இந்நிலைமை மோசமடைய முன்னர் பல்வேறு டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நிபுணர் அறிக்கை ஒன்றை வழங்குமாறு அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. மேலும் டெங்கு பரவுவதை கட்டுப்படுத்த தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு உள்ளிட்ட நிபுணர்களைக் கொண்ட குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

டெங்கு வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்தும் முயற்சிகளை ஒருங்கிணைக்க ஜனாதிபதி செயலணியொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

தொற்று நோய்களைத் தடுக்க தேவையான நடவடிக்கைகளை செயல்படுத்த சுகாதார அதிகாரிகளுடன் பணிக்குழு செயல்படும்.

கம்பஹா மாவட்டத்தில் அதிகபட்சமாக 6,953 நோயாளிகளும், கொழும்பு மாவட்டத்தில் 6,500 நோயாளிகளும் பதிவாகியுள்ளனர்.

டெங்கு பரவாமல் தடுக்க நுளம்பு பரவும் இடங்களை அகற்றுதல், பாதுகாப்பு ஆடை அணிதல் உள்ளிட்ட அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற் கொள்ளுமாறு பொதுமக்களை அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

## ஐதேக செயலாளர் மன்னாரில்

ஐக்கியதேசியகட்சியின் பொது செயலாளர் பாலிதரங்கேபண்டார ஞாயிற்றுகிழமை மன்னார் மாவட்டத்திற்கு வருகை தந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பின் பேரில் இம் முறை உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் விவசாய அமைப்பு, மீனவ சங்கப் பிரதிநிதிகள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், மகளீர் அமைப்புகளின் உறுப்பினர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடும் முகமாக அவரது பயணம் இடம்பெற்றது.

நிகழ்வில் ஓய்வு நிலை ஜெனரல் றனுல ராஜ கருண, கிராமிய பொருளாதார இராஜங்க அமைச்சின் இணைப்பு செயலாளர் றஞ்சித் குணரெட்ண, நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் மாவட்ட இணைப்பாளர் தர்சின், ஐக்கிய தேசிய கட்சியின் மாவட்ட இணைப்பாளர் பஸ்மி உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

ஐக்கிய தேசிய கட்சியின் மன்னார் மாவட்டத்திற்கான நிர்வாகக் குழுத் தெரிவும் இடம் பெற்றது. உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், விவசாய அமைப்புகள், மீனவ சங்கங்கள், சிவில் அமைப்புக்கள், மகளீர் அமைப்புகளின் உறுப்பினர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஆகிய பலரை அழைத்திருந்தபோதிலும் பெரும்பாலானோர் வருகை தரவில்லை.




## கேரளவில் படகு கவிழ்ந்து 16 பேர் பரிதாப உயிரிழப்பு



இந்தியாவின் கேரள மாநிலம் மலப்புரம் என்ற இடத்தில் 40 பேருடன் சென்ற சுற்றுலா படகு ஒன்று கவிழ்ந்ததில் குறைந்தது 16 பேர் உயிரிழந்துள்ளனர் என்றுதகவல்வெளியாகிஉள்ளது. ஞாயிற்றுக்கிழமை மலப்புரத்தின் தானூர் பகுதியில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. மீட்பு பணிகள் மிகத் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுவருவதாக தகவல்.

உயிரிழந்தவர்களில் 4 குழந்தைகள் அடங்குவர். மாலை 6.30 மணி அளவில் படகு கவிழந்து உள்ளது. முன்னதாக, கேரள மாநில அமைச்சர் அப்துர் ரஹ்மான், படகு கவிழ்ந்த விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர் என்று தெரிவித்திருந்தார். இருந்தும் உள்ளூர் செய்தி நிறுவனங்கள் 16 பேர் உயிரிழந்திருப்பதாக தெரிவித்துள்ளன.

அவளவுக்கு அதிகம் பேர் பயணம் செய்தது படகு கவிழ்ந்ததற்கான காரணமாக சொல்லப்படுகிறது. இரண்டு அடுக்கு கொண்ட அந்தப் படகின் கீழ் பகுதியில் இருந்தவர்களை காக்க முடியவில்லை என படகில் இருந்து உயிர் தப்பிய ஃபிக் தெரிவித்துள்ளார். மீட்பு படையினருடன் உள்ளூர் மீனவர்களும் இணைந்து மீட்புபணியை மேற் கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கோரிக்கைகள் மட்டும் போதுமானதல்ல

**பணம் அதிகமாகக் கிடைக்கிறது என்பதற்காக காணிகளை வேற்று சமூகத்தினருக்கு விற்காதீர்கள் என்று புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் ஒரு வேண்டுகோளைத் தமிழ் மக்களிடம் முன்வைத்துள்ளார். யாழ்ப்பாணம் கந்தரோடையில் பிக்கு ஒருவர் காணி வாங்கி அதில் விகாரை ஒன்றை அமைப்பதற்கு முற்படுகின்றார் என்கிற குற்றச்சாட்டைத் தொடர்ந்து இந்தக் கருத்தை அவர் தெரிவித்திருக்கின்றார்.**

**கந்தரோடையில் தொல்பொருள் அகழ்வாய்வுப் பகுதி ஒன்று உண்டு. அங்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் தொடர்ச்சியாக அந்த இடத்தில் தொல்பொருள் திணைக்களம் சில கட்டுமானங்களை ஏற்படுத்தியது. அது விகாரைகளின் அரைக்கோள வடிவத்தை ஒத்தன. அகழ்வாய்வுக் குழிகளை மூடும்போது அவற்றின் அடையாளமாக இந்த வடிவங்கள் அங்கு அமைக்கப்பட்டனவே தவிர, அந்த இடம் பௌத்த அடையாளங்களுக்கான இடமல்ல என்றே வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஏனெனில் கந்தரோடை வரலாற்றுக் காலத்திற்கும் முற்பட்ட பல கூறுகளைத் தன்னகத்தே கொண்டதாக அமைந்திருக்கின்றது.**

**இருப்பினும் தொல்பொருள் திணைக்களத்தினர் பின்னாளில் ஏற்படுத்திய நிலத்துக்கு மேலான கட்டுமானம் காரணமாக அது பௌத்த விகாரை எச்சங்ளைக் கொண்ட இடம் என்கிற தோற்றப்பாடு ஏற்பட்டுள்ளது. இதையடுத்தே அந்த இடத்திற்கு அருகில் ஒரு காணியை வாங்கி அதில் விகாரையைக் கட்டியெழுப்பி, கந்தரோடை பண்டைய பௌத்த எச்சம் என்பதாக வரலாற்றைத் திரிபுபடுத்த முயற்சிக்கப்படுகிறதோ என்கிற அச்சம் தமிழர்களிடம் ஏற்பட்டுள்ளது. இதன் வெளிப்பாடாகவே நாடாளுமன்ற உறுப்பினர் சிந்தார்த்தனின் கருத்தும் அமைந்துள்ளது.**

**இருப்பினும் இலங்கையில் எவரொருவரும் இன, மத, சாதிய அடையாளங்களை முன்வைத்து எவருக்கும் காணியை விற்க மாட்டேன் என்று மறுக்கவோ காணியை வாங்கக்கூடாது என்று தடுக்கவோ முடியாது. அல்லது இந்தியாவின் ஜம்மு – காஷ்மீர் மாநிலத்தில் முன்னர் இருந்தது போன்று (பாஜக அரசு இப்போது அதனை நீக்கிவிட்டது) அந்த மாநிலத்தைச் சேர்ந்த குடிமக்கள் தவிர வேறு யாரும் அங்கு காணி நிலம் வாங்க முடியாது என்கிற சிறப்பு நிலை வடக்கு கிழக்கில் இல்லை. அப்படிய இருக்கும்போது யாரையும் காணியை வாங்க முடியாது என்று தடுக்கவும் முடியாது.**

**அதேபோன்று காணி வியாபாரம் என்பது இன்று வடக்கு கிழக்கில் முக்கியமான வர்த்தக நடவடிக்கையாக மாறிவிட்ட நிலையில், அதிக இலாபம் கிடைப்பதைத்தான் வர்த்தகர்கள் கவனத்தில் கொள்ளப்போகிறார்களே தவிர, வாங்குபவர் எந்தச் சாதி, எந்த இனம் என்று யாரும் கவனிக்கப்போவதில்லை. அப்படிச் செய்தால் அவரது காணியின் பெறுமதி இறக்கம் காணுமே தவிர ஏற்றம் காணாது. எனவே வியாபாரிகள் தங்கள் இலாபத்தை இழந்து இனத்துக்காக காணிகளைத் தமிழர்களுக்கு மட்டுமே விற்பார்கள் என்றும் எதிர்பார்க்க முடியாது.**

**இந்த நிலமைகளை உண்மையில் ஏற்படுத்த விரும்பினால் மக்களிடம் அரசியல் விழிப்புணர்வை உருவாக்குவது முக்கியம். தமிழ்த் தேசியத்தை வளர்த்தெடுப்பதும், வாக்கு அரசியலைத் தாண்டிய தேசிய அரசியலை முன்னெடுப்பதும் அவசியம். அதற்கு அர்ப்பணிப்போடு இடைவிடாது பணியாற்றக்கூடிய அரசியல் சிந்தனையும் திட்டங்களும் அவசியம். எல்லாவற்றையும்விட இதுபோன்ற ஆபத்துக்களை முன்னுணர்ந்து அவற்றுக்கேற்ற வகையில் தமது மக்களை தயார்ப்படுத்தி வைத்திருக்கும் அரசியல் ஆளுமையும் தீர்க்கதரிசனமும் மிக்க தலைவர்கள் அவசியம். தேர்தல் அறிவித்தால் மட்டுமே உற்சாகமடைந்து மாற்றுக் கட்சிளை மடைந்திறந்த வெள்ளமென விமர்சித்து விட்டு ஓயும் கட்சிகளால் அது முடியாது.**

**ஆக, நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் இலகுவாக மக்களிடம் விடுத்த கோரிக்கை வெற்றிபெறவேண்டுமானால் ஆற்றப்படவேண்டிய பணிகள் பலவுண்டு. வெறும் கோரிக்கையால் மட்டும் அது சாத்தியமாகாது. சட்ட மற்றும் அரசியல் ரீதியாகவும் அதனை நடைமுறைப்படுத்த முடியாது. எனவே அரசியல் கோரிக்கைகளைத் தாண்டிச் சிந்தித்துச் செயலாற்றக்கூடிய துறைசார் அமைப்புக்களையாவது உடனடியாக உருவாக்குவதும் அதற்கான நிதித் தேட்டங்களை ஏற்படுத்திக் கொடுப்பதும்தான் அரசியல் தலைவர்கள் இப்போதைக்கு ஆற்றுக்கூடிய ஆக்குறைந்த பணியாகவாவது இருக்கும்.**

## எதிர்க்கட்சியின் ஆதரவு வேண்டுமென்றால் நிதிக் குழு தலைமைப் பதவியை தரவேண்டும்

### எதிர்க் கட்சிக் கொறடா ஆட்சியாளர்ளிடம் வலியுறுத்து

நாடாளுமன்ற அரச நிதிக்குழுவின் தலைமைப் பதவிக்கு எதிர்க்கட்சிக்கு நம்பிக்கையான உறுப்பினர் ஒருவரை ஆட்சியாளர்கள் நியமிக்கவேண்டும் எனப்பல தடலைகள் ஆட்சியாளர்களிடம் தெரிவித்துள்ளபோதும் அதனை அவர்கள் தட்டிக் கழித்தே வருகிறனர். எதிர்க் கட்சியின் ஆதரவு இந்த ஆட்சிக்குத் தேவையாக இருந்தால் எமது கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் எதிர்க் கட்சியின் பிரதம கோறடாலக்ஸ்மன்கிரியெல்ல தெரிவித்தார்.

நிலையியற் கட்டளையின்பிரகாரம் எமக்குகிடைக்க வேண்டிய நிதிக் குழுத் தலைமைப் பதவீ கிடைக்காவிட்டால் சர்வதேசத்திடம் முறையிட வேண்டிவரும் எனவும் அவர் எச்சரித்தார்.

நாடாளுமன்ற அரச நிதிக்குழுவுக்கு எதிர்க் கட்சி உறுப்பினர் ஒருவர் தலைமைப் பதவிக்கு நியமிக்கப்படாதமை குறித்து அவரிடம் கேட்கப்பட்டதற்குப் பதில் அளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற அரச நிதிக் குழுவின் தலைவர நியமனம் தொடர்ந்து 4 தடவைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் திங்கட்கிழமை மாலை நாடாளுமன்ற தெரிவுக் குழு கூடுகிறது. இந்நிலையில் அரச நிதிக்குழுவுக்கு தலைவர் நியமனம் தொடர்பாக கலந்துரையாட இருக்கிறது.

கோபா குழுவின் தலைவர் பதவி நிலையியற் கட்டளையின் பிரகாரம் எதிர்க் கட்சி உறுப்பி னர் ஒருவருக்கே வழங்கப்பட வேண்டும். ஆனால் ஆட்சியாளர்கள் தமக்கு ஆதரவாக செயற்படும் எதிர்க்கட்சி உறுப்பினருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. அதனை நாங்கள் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. தலைவர் பதவி எமக்கு நம்பிக்கையான ஒருவருக்கே வழங்கப்படவேண்டும்.

அத்துடன் நாடாளுமன்ற அரச நிதிக்குழுவின் தலைவராக ஹர்டி சில்வாவை நியமிக்குமாறு நாங்கள் பல தடவைகள் அரசாங்கத்துக்கு தெரிவித்திருக்கிறோம். ஆனால் அரசாங்கம் அதனை திட்டமிட்டு நிராகரித்து வருகிறது.

ஜனாதிபதியினால் நாடாளுமன்ற கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்படுவதற்கு முன்னர் ஹர்டி சில்வாவே அதன் தலைவராக இருந்து, சிறந்த முறையில் அதன் நடவடிக்கைகளை முன்னெடுத்துச்சென்றிருந்தார். அரசாங்கம் இதனை பொறுத்துக் கொள்ளமுடியாமலே தற்போது அரசாங்கத்துக்கு தேவையான ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

அத்துடன் இந்த அரசாங்கம் கோத்தாபய ராஜபக்ஷவின் வழியிலேயே தொடர்ந்து செல்கிறது. அந்த அரசாங்கத்தில் இருந்தவர்களே தற்போதும் இருக்கின்றனர். ஜனாதிபதி மாத்திரமே அதில் மாற்றத்துக்கு இருக்கிறது. அதனால் அவர்கள் எப்போதும் அவர்களின் ஊழல் மோசடிகளுக்கு துணை போகக்கூடிய ஒருவரையே நியமித்துக்கொள்ள முயற்சிப்பார்கள்.

அத்துடன் எமது உரிமைகளை நாங்கள் எமக்குள் கலந்துரையாடி பெற்றுக் கொள்ளவே முயற்சிக்கிறோம். முடியாத நிலை ஏற்பட்டால் சர்வதேசத்தை நாடுவதை தவிர எமக்கு வேறு வழியில்லை.

அதனால் நிலையியற் கட்டளையின் பிரகாரம் எமக்கு கிடைக்கவேண்டிய அரச நிதிக்குழுவின் தலைவர் பதவியை எதிர்கட்சிக்கு நம்பிக்கையான ஒருவருக்கு வழங்கவேண்டும். இல்லாவிட்டால் சர்வதேசத்தில் முறையிட்டாவது எமது உரிமையை பெற்றுக்கொள்ள வேண்டி ஏற்படும் - என்றார்.

## அரசர் சார்ல்ஸ் கைக்கொள்ள வேண்டிய விதிகள்



இங்கிலாந்து தலைநகர் லண்டனில் சனிக்கிழமை நடந்த விழாவில் அந்நாட்டு மன்னர் 3ஆம் சார்ல்ஸ் (வயது 74) முறைப்படி முடிசூடிக் கொண்டார்.

1952ஆம் ஆண்டு 2ஆம் எலிசபெத் தனது 26ஆவது வயதில் இங்கிலாந்து ராணியானார். அவருக்கு 1953ஆம் ஆண்டு ஜூன் 2 முடிசூட்டு விழா நடைபெற்றது. அவர் 2022 ஆண்டு செப்டம்பர் 8 காலமானார்.

இதையடுத்து அவரது மகனும் இளவரசருமான 3ஆம் சார்லஸ் மன்னரானார். அவருக்கு 2023ஆம் ஆண்டு மே 6 பாரம்பரிய முறைப்படி முடிசூட்டு விழா நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

இதன்படி, லண்டனில் உள்ள வெஸ்ட்மின்ஸ்டர் அபே தேவாலயத்தில் முடிசூட்டுவிழா நடைபெற்றது. இதில் உலகம் முழுவதிலிருந்து பிரபலங்கள் கலந்துகொண்டனர்.

இந்த நிலையில் மன்னரான மூன்றாம் சார்லஸ் அவசியம் கடைபிடிக்க வேண்டிய அரசக் குடும்ப விதிமுறைகள் விவரம் வருமாறு:

பரிசுகளை மறுக்கக் கூடாது: பிரிட்டன் அரச குடும்ப வழக்கத்தின்படி மன்னர் பரிசு பொருட்களை மறுக்கக் கூடாது.

மகனுடன் பயணம் கூடாது. மன்னரான மூன்றாம் சார்லஸ் இளவரசர் உடன் ஒன்றாக ஒரே விமானத்தில் பயணிக்கக்கூடாது. மன்னர் தனி விமானத்தில்தான் பயணிக்கOவேண்டும்.

ஆடை விதிமுறைகள்: அரசர் வெளிநாடுகளுக்குச் செல்லும்போது சில ஆடை விதிகளையும் பின்பற்றவேண்டும். விதிகளின்படி, அவர்கள் பயணம் செய்யும் நாட்டின் உள்ளூர் பாரம்பரியத்தை அவர்களின் ஆடை பிரதிபலிக்கவேண்டும்.

செல்ஃபி கூடாது: மன்னர் மக்களுடன் செல்ஃபி புகைப் படங்கள் எடுக்கக் கூடாது. ஆட்டோகிராஃப் (கையெப்பம்) வழங்கக் கூடாது.

மட்டிமீன்கள் உண்ணக் கூடாது: உணவு நச்சுத் தன்மையைத் தவிர்ப்பதற்காக மட்டி மீன்களை அரசர் உட்கொள்ளக்கூடாது. மன் னர் தனது பாதுகாப்பை உறுதிப் படுத்த அந்நியர்களிடமிருந்து உணவையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

## சீனா வறுமையை மறைக்கிறது அமெ. ஊடகங்கள் குற்றச்சாட்டு

உலகளவில் பொருளாதாரத்தில் சக்தி வாய்ந்த நாடாக சீனா உருவாகி வரும் நிலையில் அந்நாட்டில் நிலவும் வறுமையை மறைக்கும் செயல்களில் ஜி ஜின்பிங்கின் அரசு செயல்படுவதாக அமெரிக்க ஊடகங்கள் குற்றம்சாட்டியுள்ளன.

அந்த வகையில் சமீபத்தில், 100 யுவானை ஓய்வூதியமாகப் பெறும் ஒருவர் மளிகை கடையில் நின்று என்ன பொருட்களை வாங்கலாம் என்று சிந்தித்துக் கொண்டிருக்கும் வீடியோ சீன சமூக வலைதளங்களில் வைரலானதாகவும் அதனை சீன அரசு நீக்கியதாகவும் நியூயார்க் டைம்ஸ் போன்ற பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும் சீனாவில் நிலவும் பொருளாதார நெருக்கடிகள் அங்குள்ள மக்களை அதிருப்தியில் தள்ளி இருப்பதாகவும் ஊடகச் செய்திகள் கூறுகின்றன.

சீனாவை சேர்ந்த ஒருவர் தனது சமூக வலைதள பக்கத்தில், என் முகத்தை தினமும் நீரால் சுத்தம் செய்கிறேன். ஆனால் என் முகத்தை விட என் பர்ஸ் சுத்தமாக இருக்கிறது என்ற பாடலை பாடிபதிவேற்றியுள்ளார். இந்த நபரின் பக்கத்தையும் சீன அரசு தடை செய்துள்ளதாக நியூயார்க் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் சீனாவில் புலம்பெயர்ந்த தொழிலாளி ஒருவர், கொரோனாவினால் பாதிக்கப்பட்டபோது உள்ளூர் அதிகாரிகளால் அவர் கடுமையான நெருக்கடிகளுக்கு உள்ளானார். இதனை தொடர்ந்து அவருக்கு ஆதரவாக சமூக வலைதளங்களில் அனுதாப அலைகள் எழுந்தது நினைவு கூரத்தக்கது.

அனைவருக்கும் பொதுவான செழிப்பை ஏற்படுத்தும் ஒரே பொதுவுடமை நாடு என்று தன்னை சீனா அடையாளப்படுத்துகிறது. அதே நேரத்தில் கடந்த மார்ச் மாதம், சீன அரசின் சைபர் பிரிவு, இது வேண்டுமென்றே சோகத்தைக் வெளிப்படுத்தும் வீடியோ. கம்யூனிசம் கட்சி மற்றும் ஆட்சியின் நற்பெயருக்கு சேதம் விளைவிக்கும், தீங்கு விளைவிக்கும் தகவல்களை அளிக்கும் வீடியோக்களை வெளியிடுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்தது.

மேலும் சமூக வலைதளங்களில் வயதானவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் குழந்தைகளின் சோகமான வீடியோக்களை பதிவிடுவது இந்த பிரிவால் தடை செய்யப்படுகிறது.

இவ்வாறு சீனா அதன் வறுமை நிலையை மறைக்கும் செயலில் ஈடுபடுகிறது என்று அமெரிக்க ஊடகங்கள் குற்றச்சாட்டுகின்றன.

## ஜே.வி.பிக்கு ஆப்புவைக்கவே காலிமுகத்திடலில் அரசியல் கூட்டத்துக்குத் தடை விதித்த ஜனாதிபதி

கொழும்பு - காலிமுகத்திடலில் எந்தவோர் அரசியல் கூட்டமும் இசை நிகழ்ச்சியும் நடத்த முடியாது என்று ரணில் அரசு தீர்மானம் எடுத்தமைக்கு உண்மையான காரணம் ஜே.வி.பிக்கு ஆப்பு வைக்கவே என்று தெற்கு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச்செய்தியில்மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கடந்த முதலாம் இடம் பெற்ற மே தினக் கூட்டத்தை காலிமுகத்திடலில் நடத்துவதற்குத்தான் ஜே.வி.பி. திட்டமிட்டிருந்தது. அதற்காக ஏப்ரல் மாத ஆரம்பத்திலேயே ஜே.வி.பி. அனுமதியும் கோரி இருந்தது.

ஆனால், ஜே.பி.பியினர் காலிமுகத்திடல் முழுவதையும் நிரப்பும் வகையில் மக்களை அழைத்து வருவதற்குத் திட்டமிட்டிருந்தனர்.

அவ்வாறு அழைத்து வந்தால் ஜே.வி.பியின் மக்கள் பலம் என்னவென்று நாட்டுக்குத் தெரிந்துவிடும். ஏற்கனவே ஜே.வி.பி. சில இடங்களில் முதலாமிடத்திலும், சில இடங்களில் இரண்டாமிடத்திலும் இருக்கின்றது என கூறுகின்றன.

இந்தநிலையில் காலிமுகத்திடலை அவர்கள் முற்றாக நிரப்பினால் அவர்களின் பலம் வெளியே தெரிந்து விடும் என்று அஞ்சித்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்படி முடிவை எடுத்தார் என்று சொல்லப்படுகின்றது.

இதனால் ஜே.வி.பியினர் மே தினக் கூட்டத்தை கொழும்பு நகர மண்டப வளாகத்தில் நடத்தினர். - என்றுள்ளது. (02)



OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555
conditions apply*


Malaysia Tour
5 DAYS 4 NIGHTS
INCLUSION
» 04 Night stay in Kuala Lumpur
» Daily breakfast at hotel
» Return AirTicket
» Getting Highland tour with cable car
» City tour on arrival day
» Evening tour to twin tower
» Batu caves temple visit
» Putrajaya city tour
LKR 148,000.00
For Early Booking
Travel Date: 19 - 23 May 2023
Semba
Semba Services (Pvt) Ltd.
551A, Kasthuriyar Road ,Jaffna
+94 77 307 8799

கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

## Ishwaryam Banquet Hall





Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=

SPECIAL MENU PACKAGE

**BEVERAGES**

jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.05.2023இல் வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 04

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 24 ஞாயிற்றுக்கிழமை 07.05.2023 கதிர் 51

## மட்டு. சவுக்கடிக் கடலில் மூழ்கி 2 மாணவர்கள் சாவு

மட்டக்களப்பு சவுக்கடி பகுதியில் கடலில் நீராடச் சென்றஇருமாணவர்கள்நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

கறுப்பங்கேணியைச் சேர்ந்த டானியல் றோகித் (16வயது), இருதயபுரத்தினைச் சேர்ந்த நிரோசன் பிரவீன்(16வயது) ஆகியோரே உயிரிழந்தவர்கள் என்று கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர். மாணவர்களின் சடலங்களை அவர்களது உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளனர்.

தனிப்பட்ட வகுப்பு ஒன்றிற்கு செல்வதாக வீட்டில் சொல்லிவிட்டு சனிக்கிழமை மாலை புறப்பட்டுச் சென்ற இரு மாணவர்களும் பின்னர் கடற்கரை பகுதியில் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

2



## இறுதி நிகழ்வில் கிழக்கு ஆளுநர் நன்றி சொன்னார் கோட்டாவுக்கு

முன்னாள் அரசுத்தலைவர் கோட்டாபய ராஜபக்வுக்கு நன்றி, இதுவே நான் பங்கேற்கும் இறுதி நிகழ்வாக இருக்கப்போகின்றது என்ற கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்லத் தெரிவித்தார்.

திருகோணமலையில் சனிக்கிழமை நடைபெற்ற வெசாக் நிகழ்வொன்றில் கலந்துகொண்டுஉரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது: ,


நான் கடந்த மூன்றரை ஆண்டுகளாக கிழக்கு மாகாண ஆளுநர் பதவியில் இருந்துள்ளேன். இக்காலப் பகுதியில் முக்கியமான சில விடயங்களில் வெற்றிகளைப் பெற்றுள்ளோம்.

அந்த வகையில் இன்றைய (நேற்று) நிகழ்வுதான் நான் ஆளுநராகப் பங்கேற்கும் இறுதி நிகழ்வாக இருக்கப்போகின்றது. அந்த வகையில் கிழக்கு மாகாண மக்களுக்கும் எனக்கும் ஒத்துழைப்புவழங்கியஅரசஊழியர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் மிக்க நன்றிகள்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் வின் அழைப்பினை ஏற்றுத்தான் நான் கிழக்கு மாகாண ஆளுநர்பதவியைப்பெற்றிருந்தேன். அவர் என்னிடத்தில் இந்தப் பொறுப்பினை ஒப்படைத்தமைக்காக அவருக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன் – என்றார்.

# அதிக பணத்துக்காகக் காணிகளை வேறு சமூகத்தினருக்கு விற்காதீர்

### சித்தார்த்தன் எம்.பி. இன்று வலியுறுத்து



பணம் அதிகமாகக் கிடைக்கிறதுஎன்பதற்காக் காணிகளைவேற்றுச்சமூகத்தவர்களுக்கு விற்கவேண் டாமென, தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித் தார்த்தன் கோரிக்கை விடுத்தார்.

இன்று கந்தரோடையிலுள்ள அவரது இல்லத்தில் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

சிலகாலத்தின்முன்னர் வரைஇங்குதமிழ்பௌத்தர்கள் வாழ்ந்தார்கள். தமிழ் பௌத்த சின்ணங்களைஆக்கிரமிப்பதற்காகத்தான் பௌத்த விகாரைகள் தற்போது கட்டப்பட்டு வருகின்றன.

பௌத்தர்களே இல்லாத இடங்களில் அவை கட்டப்படுகின்றன.

விகாரைகளை கட்டி, அதை பராமரிக்க மெது மெதுவாக ஆட்களைக் கொண்டுவந்து,அவற்றைச் சிங்களப் பகுதிகளாக்கும் நடவடிக்கைகளே இடம் பெற்று வருகின்றன.

2

# வறியவர்கள் எண்ணிக்கை 25 சதவீதமாக அதிகரிக்கும்

### உலக வங்கி எச்சரிக்கை




இலங்கையில் போதிய வருமானம் இன்மை காரணமாக அடுத்த சில ஆண்டுகளில் வறுமை 25 சதவீதத்திற்கு மேல் அதிகரிக்கும் என்று உலக வங்கி கணித்துள்ளது.

2023, 2024 ஆண்டுகளுக்கான பொருளாதார நிலைமை இலங்கையில் எதிர்மறையாகவே இருக்கும் என்றும் உலக வங்கி கணித்துள்ளது. வருமானத்திரட்டு மற்றும் சீர்திருத்தங்களின் ஊடாக நிலைமைகளை மாற்றுவதற்கு வாய்ப்புக்கள் உண்டெனவும் அது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின்வறுமையின் வீதம் 2021முதல்தொடர்ந்து அதிகரித்தேவருகின்றது, 2021, 2022 ஆண்டுகளில் 13.1 சதவீதமாக இருந்த வறுமையின்சதவீதம் இரட்டிப்பாகி இந்த வருடத்தில் 25 சதவீதத்தைப் பிடிக்கும்எனஉலகவங்கிதனது இருவருடகால அறிக்கையில் தெரிவித்திருந்ததையும் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த அதிகரிப்பு 2022 ஆம் ஆண்டில் 2.5 மில்லியன் மக்களை வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்கள் பட்டியலுக்குத் தள்ளியுள்ளது.

அத்துடன் உணவுப் பாதுகாப்பின்மையை அனுபவிக்கும்குடும்பங்கள்சுகாதாரம் மற்றும் கல்விக்கான தங்கள் செலவைக் குறைக்கின்றன என்ற சுட்டிக்காட்டியுள்ள உலகவங்கி, அதிகரித்துவரும் உணவுப் பாதுகாப்பின்மை, ஊட்டச்சத்துகுறைபாடுஎன்பன வளர்ச்சியில்பெரும்தாக்கத்தைச் செலுத்துகின்றன. குறிப்பாக, வளர்ச்சிகுறைவடையும்வீதமானது, 2021இல் 7.4 சதவீதத்திலிருந்து 2022 இல் 9.4 சதவீதமாக அதிகரித்துள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

## முன்கூட்டியே ஜனாதிபதித் தேர்தல் சொல்கிறார் சந்திரசேன எம்.பி.



அரசமைப்பினால் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்கு முன்பாவே ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்று பொது ஜன பெரமு–னவின்நாடாளுமன்றஉறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் செய்தியாளர்ளிடம் பேசியபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தாவது:

ஜனாதிபதித் தேர்தலையோ, நாடாளுமன்றத் தேர்தலையோ பிற்போட முடியாது என்று அனைவரும் அறிவார்கள்.

அந்தத்தேர்தல்கள்உரிய காலத்தில் நடத்தப்படவேண்டியது கட்டாயம்.

அந்த வகைளில் ஜனாதிபதித் தேர்தல் குறிக்கப்பட்ட காலத்திற்கு முன்னதாகவே நடப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

அதேபோன்றுநாடாளுமன்றத் தேர்தலும் முற்கூட்டி நடத்தப்படலாம்.

இந்த இரண்டு தேர்தல்களும்எந்தவொரு சந்தர்ப்பத்திலும் காலம் தாழ்த்தப்படாது என்பதை நான் உறுதியாகச் சொல்கின்றேன் – என்றார்.

## யானை தாக்கி புல்மோட்டையில் ஒருவர் இறப்பு



(எப்.முபாரக்)

திருகோணமலை புல்மோட்டையில் இன்று காலை யானைதாக்கியதில் வயோதிபரொருவர் உயிரிழந்தார். முன்னாள் தபால் பணியாளரான அப்துல்லத்தீப் அன்வர் (58வயது) என்பவரே உயிரிழந்தார்.

புல்மோட்டை, 4 ஜின்னா நகரில் கடந்த பல நாட்களாகவே காட்டுயானை ஒன்றின் தொல்லைஅதிகரித்துள்ளது. ஊருக்குள் நுழைந்து வீடுகளை உடைத்து நெல்லை அள்ளித் தின்றுவிட்டுச் செல்வதை இந்த யானை வழக்கமாகக் கொண்டிருக்கிறது. இன்று அதிகாலையும் யானைகுடியிருப்புநுழைந்து அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளது.

இதை தடுத்து யானையைக் காட்டுக்கு விரட்டச் சிலர் முயற்சி செய்தனர். அவர்களுடன் அன்வரும் இணைந்திருந்தார்.எதிர்பாராத தருணமொன்றில் யானை அன்வரைத் தூக்கி வீசியதில் அடிபட்டுஅவர்உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

யானைசிலவீடுகளுக்குள் சேதங்களை ஏற்படுத்தி, ஒரு வீட்டை உடைத்து நெல் மூடைகள் சிலதை தின்றுவிட்டுச்சென்றுள்ளது என்று ஊர் மக்கள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாகப் புல்மோட்டைப் பொலிஸார்விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றார்கள்.

# டெங்கு, இன்புளுவென்ஸா தொற்று சிறுவர்களின் மத்தியில் அதிகரிப்பு

### மருத்துவர்கள் எச்சரிக்கை



அண்மைய நாட்களில் டெங்கு மற்றும் இன்புளுவென்ஸா ஆகிய தொற்றுக்கள் சிறுவர்கள் மத்தியில் வேகமாக பரவி வருவதாக கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் விசேட வைத்தியநிபுணர் தீபால் பெரேரா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் இன்று செய்தியாளர்களைச் சந்தித்துத் தெரிவித்ததாவது:

அண்மையநாட்களில் மழையுடன் கூடிய காலநிலை தொடர்வதால் டெங்கு மற்றும் இன்புளுவன்சா ஆகிய தொற்றுக்களுக்கு இலக்கான சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

ஆகவே, 24மணிநேரத்திற்கும் அதிகமான காய்ச்சல் காணப்படுமாயின் உடனடியாக வைத்தியரை நாடி குருதிப் பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். அத்துடன், இருமல் மற்றும்சளிப்பிரச்சினைகள் உடையவர்கள் முகக்கவசங்களை அணிவதோடு, 48 மணிநேரத்திற்கும் அதிகமாக இந்த நிலைமைகள் நீடித்தால் உடனடியாக வைத்தியரை நாடி சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

வீட்டுச்சுற்றாடலை டெங்கு பரவுவதற்கு ஏதுவான வழிகளை அகற்றுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்-என்றார்.



# சிறுவருக்கு எதிரான முறைகேடுகள் எல்லாமுமே பதிவாகுவதில்லை

### பாதுகாப்பு அதிகார சபைத் தலைவர் தெரிவிப்பு



முறைப்பாடுகளுக்கு அதிகமான எண்ணிக்கையில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் நடைபெறுவதாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் உதயகுமார அமரசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறுவர்கள் தொடர்பான முறைகேடுகள் குறித்து ஒவ்வொரு நாளும் முறைப்பாடுகள் கிடைக்கின்றன. ஆனால் அந்த எண்ணிக்கையை விடவும் அதிகமான சம்பவங்கள் நிகழ்கின்றன. அவை தொடர்பில் எந்தவிமான முறைப்பாடுகளும் பதிவாகுவதில்லை.

பாடசாலையில் சிறுவர்கள் மீது நடைபெறுகின்ற பாலியல் முறைகேடுகளை விடவும், குடும்பங்களுக்குள், உறவினர்களால் நடத்தப்படுகின்ற முறைகேடுகள் அதிகமாக உள்ளன. ஆனால் அவை முறைப்பாடுகளாக பதிவாகுவதில்லை என்பது துரதிஷ்டவசமானது.

மேலும்,சிறுவர்களைஉடல் ரீதியாக தண்டித்தல், சித்தவதைக்கு உட்படுத்துதல் அச்சுறுத்துதல் உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாக எவ்விதமான முறைப்பாடுகளும் வெளிப்படையாக கிடைப்பதில்லை. இத்தகைய குற்றங்கள் இலங்கையில் இரட்டிப்பாகியுள்ளன–என்றார்.

# 5 மாவட்டங்களுக்கு மண் சரிவு எச்சரிக்கை

கடும்மழையுடனானகாலநிலைதொடர்வதன்காரணமாக5மாவட்டங்களுக்குமண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள எச்சரிக்கை அறிவிப்பில்,

பதுளை மாவட்டத்தின் பசறை பிரதேசத்திற்கும் காலி மாவட்டத்தின் பத்தேகம, நாகொட, எல்பிட்டிய மற்றும் யக்கலமுல்ல பிரதேசங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கேகாலை மாவட்டத்தில் யட்டியந்தோட்டை, ரம்புக்கன, தெரணியகல, மாவனெல்ல, கேகாலை மற்றும் கலிகமுவ ஆகிய பிரதேசங்களுக்கும் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குருநாகல் மாவட்டத்தின் ரிதிகம, மாவத் தகம அலவ்வ மற்றும் பொல்கஹவெல பிரதேசங்களிலும் மாத்தளை மாவட்டத்தின் பல்லேபொல பிரதேசங்களிலும் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# விகாரை கட்டுவதற்கு எதிர்ப்பு கந்தரோடையில் ஆர்ப்பாட்டம்






யாழ். கந்தரோடையில் தனியார் காணியைக் கொள்வனவு செய்துள்ள பிக்கு ஒருவர் அதில் விகாரை அமைப்பதற்கு எடுத்துவரும் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

தமிழ்த் தேசியப் பேரவை என்கிற புதிய அமைப்பு ஒன்று அழைப்பு விடுத்திருந்த இந்தப் போராட்டம் காலை 10 மணியளவில் இடம்பெற்றது. சுமார் 50 முதல் 100 பேர் வரையிலானோர் இதில் கலந்துகொண்டனர்.

கந்தரோடையில் தொல்பொருட் சின்னங்கள் காணப்படும் இடத்திற்கு முன் ஆர்ப்பாட்டம் தொடங்கியது. பின்னர் அங்கிருந்து நகர்ந்து விகாரை அமைக்கப்படவுள்ள இடம்வரை போராட்டக்காரர்கள் சென்று அங்கும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைவர்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் உள்ளிட்ட கட்சி உறுப்பினர்கள் பலரும் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையிலான சிலரும், பொதுமக்கள் சிலரும் பங்கெடுத்தனர்.

## அதிக ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஆட்சியில் பல விடயங்கள் நிறுத் தப்படலாமெனப் பலர் நினைத்தனர். ஆனால் நிறுத்தப்படவில்லை. ஜனாதிபதியிடம் பலமுறை முறையிடப்பட்டும், அது கவனிக்கப்படவில்லை.

இவற்றை நிறுத்த நாம் முயற்சிகள் எடுக்கவேண்டும். பேச்சு, சாத்வீக வழி, நாடாளுமன்றத்தின் ஊடான முயற்சி என அனைத்து வழிகளிலும் முயற்சிக்க வேண்டும். அவற்றை செய்து கொண்டிருக்கிறோம், என்றாலும் அவற்றின் வேகம் போதாது என நினைக்கிறேன்.

நான் கந்தரோடையில் இருக்கிறேன். இந்த கிராமத்திலுள்ள பெரும்பாலான மக்களிற்கு இந்தப் பிரச்சினை சரியாகப் புரியவில்லை. எப்படி சிங்கள பௌத்த மத அடையாள மாற்ற முயற்சிகள் நடக்கிறது என்பது அவர்களுக்கு விளங்கவில்லை.

அது மாத்திரமல்ல, சற்று அதிக பணம் கிடைக்கிறது என்றால் காணிகளை விற்கிறார்கள். முக்கியமாக வெளிநாட்டில் உள்ளவர்கள் அதைச் செய்கிறார்கள். வெளிநாட்டில் உள்ள ஒருவர்தான் கந்தரோடையில் விகாரை கட்டப்படவுள்ள காணியையும் விற்றவர்.

வெளிநாட்டிலுள்ள பலர், இங்குள்ள காணிகளைப் பிற சமூகத்தவர்களுக்கு விற்பதால் ஏற்படும் அபாயத்தைப் புரிந்துகொள்ளாமல் தொடர்ந்து விற்று வருகிறார்கள். சில இடங்களில் காணிகள் விற்கப்பட்டுள்ளதை அறிகிறோம். நல்லூரிலும் விற்கப்படுகிறது.

இங்குள்ள இராணுவத்தினர் வெறும் காணிகளை அடையாளம் கண்டு, அவற்றின் உரிமையாளர்களை அடையாளம் கண்டு, அவற்றை வாங்கும் செயற்பாட்டில் ஈடுபடுகிறார்கள். ஆகவே, சிறியளவு பணம் அதிகமாக கிடைக்கிறது என்பதற்காக மாற்று சமூகத்தினருக்கு விற்பதை நிறுத்துங்கள்.

இங்கு பௌத்த விகாரைகள் கட்டுவதற்கு எதிராக போராட்டங்கள் நடத்தப்படவேண்டும். இப்போது நடக்கும் போராட்டங்கள் மிகச்சிறியவை. 3,5,10 பேருடன் நடக்கும் போராட்டங்களினால் ஆட்சியாளர்களுக்கு நெருக்கடி ஏற்படாது. பெருமெடுப்பிலான போராட்டங்களை அனைவரும் இணைந்துமேற்கொள்ள வேண்டும்

விகாரைகள் கட்டப்படுவது என்பது ஒரு பிரச்சினை அல்ல. ஆனால் தமிழர்கள் வாழும் பகுதிகளை ஆக்கிரமித்து அவை கட்டப்படுகின்றது என்பதே குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இதற்கமைய பௌத்தர்கள் இல்லாத இடத்தில் விகாரை ஒன்றை அமைத்து அந்த விகாரையை பேணிப் பாதுக்காக்கும் வகையில் பௌத்த பிக்குகளை கொண்டு வந்து கொஞ்சம் கொஞ்சமாக தமிழர் பகுதிகள் ஆக்கிரமிக்கப்படுகின்றன.

இதற்கமைய இந்த ஆட்சியிலாவது தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என எதிர்ப்பார்க்கப்பட்ட போதிலும் அதற்கான எந்தவித நடவடிக்கையில் முன்னெடுக்கப்படவில்லை – என்றார்.

## மட்டு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்த மாணவர்கள் இருவரும் இந்த வருடம் கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சை எழுத இருந்தவர்கள் என்று கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று மாலை இவர்கள் வீட்டிலிருந்துவந்து குறித்த கடற்பகுதியில் குளித்துக்கொண்டிருக்கும்போது அலையில் அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

# வாழ்வாதார உற்பத்தி நிலையம் உழவனூரில் இன்று தொடக்கம்





கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட உழவனூர் தம்பிராசபுரம் பகுதியில் வாழ்வாதார உற்பத்தி நிலையம் திறந்துவைக்கப்பட்டுள்ளது. இந்த தொழில் உற்பத்தி நிலையத்தில் அப்பளம், அரிசி மா என்பன உற்பத்தி செய்யப்படவுள்ளதோடு, மிச்சர், கச்சான் கடலை, ஊட்டச்சத்து மா வகைகளை உற்பத்தி செய்யும் வசதிகளும் உள்ளன.

தம்பிராசபுரம் கிராமத்தில் தொழில் வாய்ப்பின்றி இருந்த 10 குடும்பங்கள் வருமானத்தை ஈட்டிக்கொள்ளும் வகையில் இந்த உற்பத்திநிலையம் தொடக்கிவைக்கப்பட்டுள்ளது. லண்டன், வோல்தம்ன்ரோவில் உள்ள ரீகற்பக விநாயகர் ஆலய நிறுவுனர் மு.கோபாலகிருஸ்ணனின் நிதி உதவியில் இந்த உற்பத்தி நிலையம் உருவாக்கப் பட்டுள்ளது.

தொடக்க நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும்,கலந்து கொண்டனர்

## 125 குடும்பங்களுக்கு உதவி





கிளிநொச்சியில் 125 குடும்பங்களிற்கு இன்று உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. காலை 11 மணியளவில் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி அலுவலகத்தில் நிகழ்வு இடம்பெற்றது.

லண்டன் கற்பகவிநாயகர் ஆலயத்தின் நிதிப் பங்களிப்பில் நலிவுற்ற குடும்பங்களிற்கு இவ்வாறு உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன், லண்டன் வோள்தம்ஸ்ரோம் கற்பகவிநாயகர் ஆலய அறங்காவலர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## தருமபுரம் ஆயுர்வேத மருத்துவமனை புது கட்டடம் திறக்கப்படாமலே சீரழிவு



கிளிநொச்சி மாவட்டம், கரைச்சி பிரதேச சபையினால் இரண்டு வருடங்களுக்கு முன்னர் தருமபுரத்தில் நவீனஆயுர்வேத வைத்தியசாலை ஒன்றுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அதன் கட்டப் பணிகள் அனைத்தும் பூர்த்தியாகி ஒரு வருடமாகிவிட்டபோதும் மக்கள் பாவனைக்காக இதுவரை கையளிக்கப்படவில்லை.

பராமரிப்பின்றி விடப்பட்ட இந்தப் புதிய கட்டடம் தற்போது ஆடு மாடுகள் உள்ளிட்ட விலங்குகளின் இருப்பிடமாக மாறியுள்ளது. வைத்தியசாலை வளாகம் பற்றைகளால் சூழப்பட்டுள்ளது.

இரவுவில் இந்தக் கட்டடம் மதுப் பிரியர்களின் தங்ககமாக இருப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். பல லட்சம் ரூபாய் பணத்தினைச் செலவழித்து புதிதாக அமைக்கப்பட்ட இந்த ஆயுர்வேத வைத்தியசாலையில் விரைவாக மக்களின் பாவனைக்காக வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் மக்கள் வலியுறுத்துகின்றனர். (113)

# ரணிலும் மொட்டும் சேர்ந்திருக்கும்வரை திருடர்களை ஒருபோதும் பிடிக்கமுடியாது

## ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. காட்டம்



ரணில் விக்கிரமசிங்கவும் மொட்டுக் கட்சியும் ஒன்று சேர்ந்து இருக்கும் வரை ஒருபோதும் திருடர்களைப் பிடிக்க முடியாது. திருடர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து இருக்கும்போது எப்படித் திருடர்களை பிடிப்பது.? – இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊழல் தடுப்புச் சட்டம் ஒன்றைக் கொண்டுவரவுள்ளதாக அரசு தெரிவிக்கின்றது. அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து என்ன பிரயோசனம்? இறுதியில் நீதிமன்றத்தையே அவமதித்துவிட்டுச் செல்வார்கள்.

ரணில் விக்கிரமசிங்கவும் மொட்டுக் கட்சியும் ஒன்று சேர்ந்து இருக்கும் வரை ஒருபோதும் திருடர்களைப் பிடிக்க முடியாது. திருடர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து இருக்கும் போது எப்படித் திருடர்களைப் பிடிப்பது?

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் வெற்றி பெற்றால் ராஜபக்ச குடும்பத்தில் இருந்துதான் ஒருவர் பிரதமராகுவார். ஆனால், ரணில் வெற்றி பெறப்போவதில்லை.

தான் வந்ததும் எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்துவிட்டன என ரணில் நினைத்துக்கொண்டு இருக்கின்றார். எங்களுக்குத்தான் தெரியும் ரணில் யாரென்று. மக்களைச் சிக்கலில் தள்ளாமல் அவர்களை நல்ல முறையில் வாழ வைப்பதற்கு இந்த ஆட்சி நடவடிக்கை எடுக்கவேண்டும் – என்றார்.

# வர்த்தக மாபியாக்களைக் கட்டுப்படுத்த உடன் நடவடிக்கை என்கிறார் அமைச்சர்



நாட்டிலுள்ள வர்த்தக சங்கத்தினரால் முன்வைக்கப்பட்டுள்ள வேலைத்திட்டத்தை விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

எரிவாயு, எரிபொருள் மற்றும் டொலரின் விலைகள் குறைந்துள்ளபோதும் சில வர்த்தக மாபியாக்கள் பொருட்களின் விலைகளைக் குறைக்கவில்லை என முறைப்பாடுகள் ஒவ்வாரு நாளும் கிடைப்பதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

மேலும் பல வர்த்தகர்கள் தினமும் தமது அலுவலகத்திற்கு வருகை தந்து முறைப்பாடு செய்துள்ளதாகவும் இதனை தடுப்பதற்கு வேலைத்திட்டம் ஒன்றையும் வர்த்தககர்கள் தெரிவித்துள்ளதாகவும் அதனை விரைவில் நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ மேலும் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கை மூலம் பல பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டு நுகர்வோருக்கு ஓரளவு நிவாரணம் கிடைக்கும் என்றும் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ நம்பிக்கை வெளியிட்டார்

யாழ். கந்தரோடையில் தனியார் காணியைக் கொள்வனவு செய்துள்ள பிக்கு அதில் விகாரை அமைப்பதற்கு எடுத்துவரும் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

கந்தரோடையில் திட்டமிட்ட பௌத்த விகாரை அமைப்பிற்கு எதிராக தமிழ்த் தேசியப் பேரவை– யால் ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டம் கந்தரோடையில் இன்று(7) காலை 10 மணியளவில் இடம்பெற்றது.

கந்தரோடையிலுள்ள தொல்பொருட்சின்னங்கள் காணப்படும் இடத்திற்கு முன் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டதையடுத்து, விகாரை அமைக்கப்படவுள்ள இடம் வரை போராட்டம் நகர்ந்து அவ்விடத்திலும் போராட்டம் இடம்பெற்றது.

இப்போராட்டத்தில் அரசியல் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் பங்கெடுத்தனர்.

# சம்பந்தனை நேரில் சந்தித்து இந்தியத் தூதர் திடீர் பேச்சு

சிங்கள – பௌத்தமயமாக்கலுக்கு உடனடியாக முடிவு கட்டவேண்டும். நிரந்தர அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்று இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயிடம் வலியுறுத்தினேன். இதே கருத்துக்களை மே 9 ஜனாதிபதியைச் சந்திக்கும் போதும் இந்தக் கருத்துக்களைக்க முன்வைப்பேன் – இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழுத் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்புக்கள் எதிர்வரும் நாட்களில் நடைபெறவுள்ள நிலையில், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் திடீரென இரா.சம்பந்தனை நேரில் சென்று வெள்ளிக்கிழமை சந்தித்தார்.

இது தொடர்பில் சம்பந்தனிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:–

யாழ்ப்பாணம் – தையிட்டியில் தமிழ் மக்களின் காணியில் சட்டவிரோதமாகப் பௌத்த விகாரை அமைக்கப்பட்டுள்ளதை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்தச் சட்டவிரோத நடவடிக்கை வடக்கு – கிழக்கில் நீண்டகாலமாகத் தொடர்கின்றது. தமிழ் மக்களின் காணிகளில் சட்டவிரோதமாகப் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுவது மட்டுமன்றி சில இடங்களில் சைவக்கோயில்களும் தாக்கப்பட்டு வருவதுடன் அழிக்கப்பட்டும் வருகின்றன.

கூடியளவுக்கு இந்தச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு நாங்கள் முயற்சி எடுத்து வந்திருக்கின்றோம்; தொடர்ந்தும் எடுப்போம்.

இந்த நடவடிக்கைகள் முடிவுக்கு வரவேண்டுமெனில் ஒரு நியாயமான – நிரந்தரமான – தமிழ் மக்கள் பாதுகாப்பாக வாழக்கூடிய அதிகாரப் பகிர்வுடன் அரசியல் தீர்வு காணப்படவேண்டும். அதற்காக எம்மாலான அனைத்துப் பங்களிப்புக்களையும் வழங்கி வருகின்றோம்.

அரசியல் தீர்வு விரைந்து காணப்பட வேண்டும். ஏனெனில் இந்த நாடு மீண்டெழ வேண்டுமெனில் அரசியல் தீர்வு கட்டாயம் வேண்டும்.

மே 9 ஜனாதிபதியை நாம் சந்திக்கவுள்ளோம். அதன்போது இது தொடர்பில் பேசுவோம். நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் என்னை வந்து சந்தித்திருந்தார். அவரிடமும் இந்த விடயம் தொடர்பில் பேசினேன். – என்றார்.

# எல்லை நிர்ணயம் தொடர்பாக இதுவரை 400 முன்மொழிவுகள்

## அவை ஆராயப்பட்ட பின்னர் இறுதி முடிவு



உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணயம் தொடர்பாக ஆணைக்குழுவிற்கு 400 முன்மொழிவுகள் கிடைத்துள்ளதாக அதன் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

பரிந்துரைகளை மதிப்பாய்வு செய்து வருவதாகவும், விரைவில் அவை குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேசி இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

கடந்த மாதம் தேசிய எல்லை நிர்ணயக் குழுவின் இடைக்கால அறிக்கை பிரதமரிடம் வழங்கப்பட்டது, இதனைத் தொடர்ந்து, அந்த எல்லை நிர்ணயம் தொடர்பில் பிரச் சினை இருப்பவர்கள் தமது முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்குக் கால அவகாசமும் வழங்கப்பட்டது. அதற்மையவே 400 முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்த முன்மொழிவுகளை தேசிய எல்லை நிர்ணயக் குழு பரிசீலித்த பின்னர் குழுவின் இறுதி அறிக்கை இம்மாதத்தின் மூன்றாம் வாரத்தில் சமர்ப்பிக்கப்படும் எனத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை சுமார் 4,000 ஆகக் குறைக்கும் நோக்கத்துடன் 2020இல் தேசிய எல்லை நிர்ணயக் குழு உருவாக்கப்பட்டது.



# மனைவியுடன் பஸில் துபாய் பறந்தார்

முன்னாள் அமைச்சரும் பொது ஜன பெரமுனவின் தலைவருமான பசில் ராஜபக் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து துபாய்க்கு இன்று காலை புறப்பட்டுச் சென்றதாக விமான நிலைய செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தப் பயணத்தில் பசில் ராஜபக்சவுடன் அவரது மனைவியும் பயணமாகியுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3.15 மணியளவில் எமிரேட்ஸுக்கு சொந்தமான விமானத்தில் இருவரும் துபாய்க்கு புறப்பட்டனர்.

# ரனில் ஜனாதிபதி வேட்பாளரானால் பிரசன்ன ரணதுங்க அவருக்கு ஆதரவு



அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வேட்பாளராக இறங்கினால் நான் அவருக்கு ஆதரவு வழங்குவேன் என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: ,

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மிகவும் தகுதியான ஒரு வேட்பாளரை நிறுத்தி அதில் நிச்சயம் வெற்றி பெறுவோம். அந்த வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவும் இருக்க முடியும். அவர் வேட்பாளராக வந்தால் அவருக்கு நான் முழு ஆதரவு வழங்குவேன்.

வீழ்ந்துகிடந்த பொருளாதாரத்தை அவர் இப்போது மெல்ல மெல்லத் தூக்கி நிமிர்த்தி வருகின்றார். அவர் மிகவும் திறமைசாலி என்பதை நிரூபித்துள்ளார்.

அவர் ஜனாதிபதியாக வந்தவுடன் எரிபொருட்களுக்கான வரிசை இல்லை. மின் வெட்டு இல்லை. உணவுப் பொருட்களுக்கான தட்டுப்பாடு இல்லை. டொலர் பிரச்சினை தீர்ந்துகொண்டு வருகின்றது. டொலரின் பெறுமதி குறைந்து நாணயத்தின் பெறுமதி அதிகரித்துக்கொண்டு வருகின்றது. எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்படுகின்றன.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெற்றுள்ளார். அப்படியான ஒரு திறமைசாலி தொடர்ச்சியாக நாட்டை ஆட்சி செய்தால் நாடு நிச்சயம் முன்னேறும். அவர் வேட்பாளராகக் களமிறங்கினால் நான் அவரை ஆதரிப்பேன். - என்றார்.

# சிசுவை கைவிட்டுச் சென்ற சந்தேகத்தில் தாய் கைது

பிறந்து நான்கு நாட்களே ஆன சிசுவை கைவிட்டுச் சென்ற சந்தேகத்தில் தாயொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று காவல்துறையினர் தெரிவித்தனர்.

வத்தேகம காவல்துறை பிரிவிற்குட்பட்ட அல்கடுவ பிரதேசத்தில் உள்ள புத்தர் சிலைக்கு அருகில் பிறந்து 4 நாட்களே ஆன சிசு ஒன்று கைவிடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தக் குழந்தையை அங்கு கைவிட்டுச்சென்றார் என்று கருதப்படும் தாயதழ கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 36 வயதுடைய மாதாகேகரகஹின்ன பிரதேசத்தை சேர்ந்தவராவார். சந்தேகநபர் லொறியில் வந்து சிசுவை குழந்தையை அங்கு விட்டுச் சென்றுள்ளார். லொறி சாரதிக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

மே முதல் நாள் குழந்தையைப் பெற்றெடுத்த அவர், மே 4 புத்தர் சிலைக்கு அருகில் குழந்தையை விட்டுச்சென்றுள்ளார்.



# அதிவாசிகளைச் சந்தித்தார் சாணக்கியன்





மதுரங்கேணிக்குளம் பிரதேசத்திற்கு பயணம் செய்த தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் அங்குள்ள ஆதிவாசிகள் சமூகத்தினரைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

எல்லைக் கிராமங்களில் தமிழரசுக் கட்சியின் வட்டாரக் கிளைகளை அமைப்பது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் உள்ளிட்ட குழுவினர் குடும்பிமலை, இரணைக்குளம், மருதங்கேணிக்குளம், பனிச்சங்குளம் ஆகிய பிரதேசங்களுக்குப் பயணம் செய்திருந்தனர்.

இதன்போது மருதங்கேணிக்குளம் பிரதேசத்திலுள்ள ஆதிவாசிகள் சமூகத்தினரின் தலைவரைச் சந்தித்துக் கலந்துரையாடிய சாணக்கியன் அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து கொண்டார்.

குறித்த பிரதேசத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளடங்கிய குழுவினர் வருவதை அறிந்த ஆதிவாசிகள் சமூகத்தினர் அவர்களுக்கு மலர் மாலைகள் அணிவித்து மரியாதை செய்திருந்ததுடன், தங்களது சமூகத்தினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினரிடம் தமது கோரிக்கைகளையும் முன்வைத்திருந்தனர்.

மேலும், 2008 ஆம் ஆண்டு மற்றும் 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முன்னாள் அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் உள்ளிட்ட தரப்பினரால் குறித்த பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய வீட்டுத் திட்டம் உள்ளிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளில் இடம்பெற்ற மோசடிகள் குறித்தும் நாடாளுமன்ற உறுப்பினரிடம் ஆதிவாசிகள் சமூகத்தினர் எடுத்துக் கூறியிருந்தனர்.

அத்துடன், இதுவரையான காலப்பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தமது இடத்திற்கு முதற் தடவையாக வந்து தமது பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொண்டமைக்காக ஆதிவாசிகளின் தலைவர் உள்ளிட்ட சமூகத்தினர் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் உள்ளிட்ட குழுவினருக்குத் தமது நன்றிகளைத் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## நிம்மதியான செய்தி

கரோனா தொற்று பாதிப்பு குறித்த உலக சுகாதார அவசர நிலை இனி வராது என உலக சுகாதார அமைப்பு (டபிள்யூஎச்ஓ) தெரிவித்துள்ளது. நிம்மதி தரும் அறிவிப்பு இது.

சீனாவில் 2019 இறுதியில் கொரோனா என்ற கொடிய நோய் பெருந்தொற்றுக் கண்டறியப்பட்டது. அடுத்த சில வாரங்களில் இந்த கொரோனா தொற்று உலகம் முழுவதும் பரவி லட்சக்கணக்கான மக்களின் உயிர்களைக் காவு வாங்கியது. உலகம் அதற்கு முன்னர் எதிர்கொண்டிராத பெரும் இக்கட்டைச் சந்தித்து.

இதற்கு முன்னரும் பெருந் தொற்றுக்கள் பரவியிருக்கின்றனதான். பிளேக் போன்ற பெருந் தொற்றுக்களால் பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்திருக்கிறார்கள். ஆனால், அது ஒன்று அல்லது இரண்டு கண்டங்களுக்கு உள்ளேயே அந்தத் தொற்றுக்கள் மட்டுப்பட்டிருந்தன. ஆனால், கொரோனா இந்த முன் அனுபவங்களை எல்லாம் தகர்த்தெறிந்தது. விரைவாக அனைத்துக் கண்டங்களுக்கும் பரவியது.

இதையடுத்து உலக சுகாதார அமைப்பு கொரோனாவை உலக அவசர நிலையாக 2020 தை 30 அறிவித்தது. கிட்டத்தட்ட மூன்றரை ஆண்டுகள் கழித்து இப்போதுதான் அந்த அவசர நிலை நீக்கப்பட்டிருக்கின்றது.

இந்நிலையில் கொரோனா பாதிப்பு குறித்து உலக சுகாதார அமைப்பின் அவசர குழு கூட்டம் உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநர் டெட்ரோஸ் அதனோம் தலைமையில் கூடி இந்த முடிவை எடுத்தது. கூட்டத்துக்குப் பின்னர் டெட்ரோஸ் அதனோம், கொவிட்-19 பாதிப்பால் உலகம் முழுவதும் அறிவிக்கப்பட்டிருந்த சுகாதார அவசரநிலை முடிவுக்கு வந்துவிட்டதாக அறிவித்தாலும், அச்சுறுத்தல் முடிந்துவிட்டதாகக் கருதக்கூடாது என்றார். இன்னமும் ஆயிரக்கணக்கான மக்கள் கொரோனாவுடன் போராடிக் கொண்டிருக்கின்றனர் என்பதே அதற்கான காரணம். கரோனா தொற்றுக்குப் பிந்தைய பாதிப்பாலும் லட்சக்கணக்கான மக்கள் இன்னும் சிரமங்களைச் சந்தித்து வருகின்றனர்.

கரோனா தொற்று இன்னமும் இருக்கிறது. தொடர்ந்து மக்களை கொல்கிறது. அது ஒரு சவாலாகவே உள்ளது. சாதாரண வைரஸ் காய்ச்சல், சளி போன்று அது இனி மனிதனுடன் கூடவே இருக்கவும்கூடும். அதே நேரம் கொரோனா குறித்து இனியும் மக்கள் கவலைப்படத்தேவையில்லை என்பதையே உலக சுகாதார அமைப்பின் அறிவிப்பு தெரிவிக்கின்றது.

கடந்த 3 ஆண்டுகளாக கொரோனா பெருந்தொற்றை தொடர்ந்து கண்காணித்து வந்த உலக சுகாதார அமைப்பின் அவசர நிலைக் குழுவின் கருத்துப்படி கொரோனா பாதிப்பு தொடர்பான சுகாதார அவசர நிலை இனி ஏற்படாது. அதுதான் இந்த ஆண்டில் மனித குலத்திற்குக் கிடைத்திருக்கக்கூடிய நிம்மதியான செய்தி.

ரஷ்ய – உக்ரேன் போர், பொருளாதார நெருக்கடிகள், உலகப் பொருளாதார மந்த நிலை என்ற பல்வேறு நெருக்கடிகளுக்கும் மனித குலம் முகங்கொடுத்தாலும் கொரோனாவால் இனியொரு அவசர நிலை ஏற்பாடு என்பது நிம்மதியான செய்திதான். அடுத்துவரும் ஆண்டுகளில் பொருளாதார வளர்ச்சியை நோக்கி நாடுகள் உறுதியாக அடியெடுத்து வைப்பதற்கு இது உதவும். உலகம் தனது இயல்பு நிலையை நோக்கித் திரும்புவதை இது ஊக்கப்படுத்தும்.

# ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து பௌசி விரைவில் நீக்கப்படுவார்

## முஜிபுர் ரஹ்மான் தெரிவிப்பு

ஜக்கிய மக்கள் சக்தியில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌசி நீக்கப்படும் சாத்தியங்கள் அதிகமுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

பௌசி எப்பொழுதும் அதிகாரத்தின் பக்கம் சாதகமாக இருப்பவர் என்றும் இலங்கையின் அரசியல் எவ்வாறு மாற்றும் என்பதை எவராலும் புரிந்து கொள்ள முடியாது என்றும் முஜிபர் ரஹ்மான் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக ஜக்கிய மக்கள் சக்தியை சேர்ந்த மேலும் சிலரைக்கூட தற்போது நம்ப முடியாதுள்ளதாகவும் முஜிபர் ரஹ்மான் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், பௌசி மீது கட்சி ஏற்கனவே ஒழுக்காற்று விசாரணையை ஆரம்பித்துள்ளதாகவும் அவர் விரைவில் கட்சியிலிருந்து தடைசெய்யப்படலாம் எனவும் முஜிபர் ரஹ்மான் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கொழும்பு மாநகர சபையின் முதல்வர் வேட்பாளராக போட்டியிடுவதற்காக முஜிபர் ரஹ்மான் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்திருந்த நிலையில் அந்த நாடாளுமன்ற பதவி பௌசிக்கு வழங்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



# இலங்கையுடனும் நெருக்கமான படை உறவுக்கு தயாராகிறது ஆஸி.

ஆஸ்திரேலியாவின் பாதுகாப்புப் படை இலங்கை மற்றும் இந்தியப் பெருங்கடலின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் உள்ள பிற நாடுகளுடன் நெருக்கமான இராணுவ உறவுகளை உருவாக்க தயாராகி வருவதாக தி சட்டர் டே பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

ஆஸ்திரேலிய அரசு அவசர பிராந்திய பாதுகாப்பு அச்சங்களின் மத்தியில் இந்த முனைப்பை மேற்கொண்டு வருகிறது.

நாட்டில் கடந்த வாரம் வெளியிடப்பட்ட புதிய பாதுகாப்பு மூலோபாய மதிப்பாய்வைத் தொடர்ந்து, நீண்டகால பாதுகாப்பு ஒத்துழைப்பு திட்டத்தை பசிபிக், தென்கிழக்காசியா மற்றும் தெற்காசியாவுக்கு அப்பால், வங்காள விரிகுடா மற்றும் அந்தமான் கடலில் உள்ள நாடுகளுக்கும் விரிவுபடுத்த ஆஸ்திரேலியா தயாராகி வருகிறது.



இந்த விரிவாக்கப்பட்ட திட்டத்தில் இலங்கை, மாலைத்தீவு மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகள் அடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை அவுஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா மற்றும் இந்தியாவுடனான உறவுகளை மேலும் விரிவுபடுத்தவும் வாய்ப்புள்ளதாக சட்டர் டே பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

அவுஸ்திரேலிவின் இந்த பாதுகாப்பு ஒத்துழைப்புத் திட்டத்தின்படி, கூட்டு இராணுவப் பயிற்சிகளை நடத்துதல், பங்காளி நாடுகளின் பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல், மூலோபாய உரையாடல்களை நடத்துதல் மற்றும் உள்கட்டமைப்பு ஆதரவை வழங்குதல் ஆகியவை அடங்கும்.

அத்துடன் இராணுவ நடவடிக்கைகளில் ஒன்றாக ஈடுபடுவதும் இதில் அடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையிலிருந்து பொருள்களின் இறக்குமதியைக் குறைத்தது சீனா

கடந்த ஜனவரி முதல் மார்ச் வரை இலங்கையில் இருந்து சீனாவிற்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதி 93.74 மில்லியன் அமெரிக்க டொலர்களாகக் குறைந்து என தெரிவிக்கப்படுகின்றது.

இதில் மோட்டார் வாகன உதிரிபாகங்கள் மற்றும் மின்சாரப் பொருட்களும் அடங்குகின்றன. சீனாவுடனான இந்த ஏற்றத்தாழ்வு பல ஆண்டுகளாக நிலவுகின்றபோதும் இன்னும் அது நிவர்த்திக்கப்படவில்லை.

அதேநேரம் சீனாவின் இந்த வர்த்தக உறவுடன் ஒப்பிடும் போது, அமெரிக்கா ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையின் மிகப்பெரிய இருதரப்பு வர்த்தக பங்காளியாக உள்ளது.

2020-2021 ஆம் ஆண்டில், சீனாவின் சந்தையில் இலங்கையின் ஏற்றுமதிப் பங்கு வெறும் 2.19 வீதமாக இருந்தது, எனினும் அமெரிக்காவுக்கான ஏற்றுமதி 24.5 வீதமாக இருந்தது.



# கொலைச் சந்தேகநபர் கைது

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளர் ஒருவரை கொடூரமான முறையில் வெட்டிக்கொலை செய்த வழக்கின் பிரதான சந்தேக நபரும் அதற்கு உடந்தையாக இருந்த ஒருவரும் கொழும்பு, தெமட்டகொட பிரதேசத்தில் மறைந்திருந்த நிலையில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக அநுராதபுரம் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

மதவாச்சி, விகாரை பிரதேசத்தில் வசிக்கும் 27 வயதுடைய ஒருவரும், மதவாச்சி, கோனா கும்பக்கொல்லாவ பிரதேசத்தில் வசிக்கும் 32 வயதுடைய ஒருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரிடம் இருந்தும் கொலைக்கு பயன்படுத்திய கத்தி, கையடக்கத் தொலைபேசி, சிம் அட்டை மற்றும் கொலையின்போது அவர்கள் அணிந்திருந்த ஆடைகள் என்பனவற்றை கைப்பற்றியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## நகருக்குள் புகுந்த யானை அட்டகாசம்

பொலன்னறுவை கிரித்தல வீதியில் உள்ள தியபெதும நகருக்குள் சனிக்கிழமை புகுந்த காட்டு யானையொன்று, வீதியோரம் இருந்த கடைகள் மற்றும் வீதியில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களைச் சேதப்படுத்தியுள்ளது.

யானை நகருக்குள் புகுந்து சேதங்களை ஏற்படுத்தியதால் அச்சமடைந்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு ஓடினர். இதனால் நகரம் வெறிச்சோடிக் காணப்பட்டது. பிரதான வீதியில் சென்ற பல வாகனங்களை காட்டு யானை தாக்கிசேதப்படுத்தியுள்ளது.

நீண்ட நேரம் நகருக்குள் நின்று அட்டகாசம் புரிந்த யானை பின்னர் கிரித்தலை வனப்பகுதிக்குள் தப்பிச் சென்றது.

